விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 23 வியாழக்கிழமை (08.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

பொதுநலவாய மாநாட்டுக்கு மன்மோகனை அழைக்க

# அமைச்சர் பீரிஸ் இந்தியா விஜயம்

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இம் மாதம் புதுடில்லிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கான அழைப்பிதழை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு வழங்கும் பொருட்டு அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தியாவுக்கு செல்லும் பீரிஸ், இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் (20ஆம் பக்கம் பார்க்க)

மீனவர் பிரச்சினை

# இலங்கைத் தூதரிடம் இந்தியா கண்டனம்!



(புதுடில்லி)

இலங்கையில் நூற்றுக்கும் அதிகமான தமிழக மீனவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து இந்தியா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கு அழைக்கபபட்டு அவரிடம் இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து இலங்கைத் தூதர் தெரிவிக்கையில்,

தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள்சர்வதேச கடல்எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பரப்பில் தொடர்ச்சியாக மீன்பிடிக்கிறார்கள் என்று எமது தரப்பில் சுட்டிக்காட்டப் பட்டது.

இந்தச் (20ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தை அனுப்பியது யார்?

## சிறிதுங்க பகிரங்க கேள்வி

ரத்துபஸ்வல மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க பிரிகேடியர் சகிதம் இராணுவத்தை அங்கு அனுப்பியது யார் என்பதை அரசாங்கம் உடனடியாக தெரிவிக்க வேண்டும் என ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துக்கு எதிரானோரை அடக்கவே துப்பாக்கிச் சூடு

## வெலிவேரிய சம்பவம் குறித்து சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக எவரும் கிளர்ந்தெழுந்தால் வெலிவேரியவில் இடம்பெற்றதே அவர்களுக்கும் நடக்கும் என்பதை வெளிப்படுத்தவே இது திட்டமிட்டு நடத்தப் பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிவேரிய சம்பவத்தில் மூவர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்ற போதிலும் மேலும் சிலர் பலியாகியும், காயங்களுக்கு உள்ளாகியும் இருக்கலாம். இதனை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் உள்ளது.

குடிநீர் கேட்டுப் போராடிய அப்பாவிப் பொதுமக்களுக்கு அரசாங்கம் துப்பாக்கி முனையால் பதில் கொடுத்துள்ளது. ஆர்ப்பாட்டத்தை கலைக்க உயிர்களை காவுகொள்வதற்கான எவ்வித அவசியமும் இல்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய இளவரசி இலங்கைக்கு விஜயம்



ஜப்பானிய இளவரசர் தக்கமடோவின் மூத்த மகளான 27 வயதான இளவரசி சுகுக்கோ இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் 19 -ம் திகதி கொழும்பு வரும் அவர் 23 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இலங்கையில் நடைபெறவுள்ள மிகப் பெரிய பாரம்பரிய திருவிழாவான பெரஹெர திருவிழாவை காணும் (20ஆம் பக்கம் பார்க்க)

# மு.கா பல்டி அடிக்கும்

## கூறுகிறார் அசாத் சாலி

(கொழும்பு)

நாம் அரசாங்கத்துடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவில்லை என தெரிவிக்கும் முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல் காலங்களில் வழமை போன்று பல்டி அடிக்கின்றது என கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஆட்சி வரலாற்றில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலேயே நாட்டில் அதிக எண்ணிக்கையான மக்கள் பலியாகியுள்ளனர்.

நாட்டில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் எதற்கு வாக்களிக்க வேண்டும் என தீர்மானித்து விட்டனர். அந்த வகையில் முஸ்லிம் மக்களும் தமது வாக்குகளை யாருக்கு அளிப்பதென தீர்மானித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## எயிட்ஸ் நோயாளிகள் 16 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கான நிலையில் 4 ஆயிரத்து 100 பேர் வாழ்வதாகவும் அதில் 100 பேர் 15 வயதிற்கும் குறைந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

2013-ம் ஆண்டு இதுவரையில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 16 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் (20ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் பிரசாரம்

# பதாகைகள், சுவரொட்டிகளை வீதிகளில் காட்சிப்படுத்த தடை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வீதிகளில் விளம்பரப்படுத்தும் முகமாக பதாகைகளையோ, சுவரொட்டிகளையோ காட்சிப்படுத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை நல்லூர் கந்தன் ஆலய திருவிழாக்களின்போது அங்கு தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அச்சுதன் தெரிவிக்கையில்,

இம் (20ஆம் பக்கம் பார்க்க)

## நோன்புப் பெருநாள் வெள்ளிக்கிழமை

(கொழும்பு)

இஸ்லாமியர்களின் புனித ரமழான் பெருநாள் நாளை வெள்ளிக்கிழமை 9-ம் திகதி கொண்டாடப் படும் என்று கொழும்பு பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது.

புனித ஷவ்வால் மாதத்துக்கான பிறையைக் கண்டு முடிவெடுக்கும் கூட்டம் நேற்று பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் எந்த பகுதியிலும் பிறை தென்பட்டதற்கான அறிவிப்பு வெளியாகவில்லை.

இதனையடுத்தே நாளை வெள்ளிக்கிழமை 30 நாள் நோன்பை முடித்து நோன்பு பெருநாளை அன்று கொண்டாடுவது என்று முடிவெடுக்கப்பட்டதாக கொழும்பு பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது. (தொ.11)

# 2013-ம் ஆண்டின் யாழ்.விருது அருட்திரு. மரிய சேவியருக்கு

## சைவசமய விவகாரக்குழுவின் மகா சபை நேற்று முடிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் வழங்கும் யாழ் விருது இந்த வருடம் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்திரு.மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்படுகிறது.

சைவசமய விவகாரக் குழுவின் மகாசபை நேற்றுமாலை அதன்தலைவரும் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான உடன்படிக்கையில் குறைபாடுகள் உள்ளன - சம்பிக்க

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சம்பூர் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான உடன்படிக்கையில் குறைபாடுகள் இருப்பதாக முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சரும்தொழில்நுட்பமற்றும்ஆராய்ச்சிதுறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அமைதியானமரணத்திற்குபாதைஅமைக்கும் விஷங்கள் நிறைந்த உணவு என்ற தலைப்பில் கொழும்பில்நேற்று முன்தினம்நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பூர் உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் மின்சார பாவனையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் என்றார்.

அதேவேளை சம்பூர் நிலக்கரி மின்சார உற்பத்தி திட்டத்திற்கு இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதியளித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டிருந்தன.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் இந்த மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்க ஆறு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தியாவின் அனல் மின் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன 50 வீத பங்குகளை கொண்டுள்ள இந்த திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின்சார நிலையத்தில் 500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இங்குஉற்பத்திசெய்யும்மின்சாரத்தைகொள்வனவு செய்ய இந்தியா தயாராகி வருவதுடன் அதற்கும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கடல்வழியாக கேபிள் இணைப்பின் ஊடாக தமிழகத்தின் மதுரைக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட உள்ளதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-1)

## பாலர் பகல் விடுதி விளையாட்டுவிழா

கோப்பாய் சமூக சேவா சங்கத்தின் பாலர் பகல் விடுதியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் சமூகசேவா சங்கத் தலைவர் க.பரமானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி த.ஹரிசாந், யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பிரதி அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி கிருஷ்ணகுமார், சங்கத்தின் முன்னாள் பொருளாளர் சீ.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(செ-5)

## காதல் தொடர்பால் மாணவன் கொலை!

காதல் தொடர்பொன்றை அடிப்படையாக கொண்டு பாடசாலை மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மாத்தறை தேவேந்திரமுனை பிரதேசத்தில் 17 வயதான பாடசாலை மாணவனின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட மாணவன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அவரது பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மாணவன் பெண்ணொருவரை காதலித்து வந்துள்ளதாகவும் இதன் காரணமாக சம்பந்தப்பட்டவர்கள் மாணவனை கொலை செய்திருக்கலாம் என பெற்றோர் கூறியுள்ள னர்.

தேவேந்திரமுனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(செ-11)

# போலி நகை அடகு வைப்பு; மூவருக்கு தொடர் விளக்கமறியல்

## ஒருவருக்கு மட்டும் பிணை அனுமதி

வடமராட்சி நெல்லியடி மக்கள் வங்கியில் போலி நகைகளை அடகு வைத்த 4 சந்தேக நபர்களில் ஒரு சந்தேக நபருக்கு பிணை வழங்கியதுடன் ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் எதிர்வரும் 21-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடி மக்கள் வங்கியில் கடந்த மாதம் இறுதியில் 4 சந்தேக நபர்களும் முச்சக்கரவண்டியில் வந்து போலி நகைகளை அடகு வைத்ததாக குற்றச்சாட்டப்பட்டு நெல்லியடி பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் ஆஜராகிய 4 சந்தேக நபர்களில் மூன்றாவது சந்தேக நபரான முச்சக்கரவண்டியின் சாரதியாக விருந்த குறித்த நபருக்கு சட்டத்தரணி நடராஜா ராஜீவன் மன்றில் ஆஜராகி வாதாடினார். குறித்த மூன்றாவது சந்தேக நபரை 50ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் விடுவித்ததுடன் ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் 21-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.(செ-9,24)

## பல வருடங்களாக திருத்தப்படாத வீதி

கரணவாய் கிழக்கு நாவலர் மட வீதி பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபையினருக்குச் சொந்தமான மேற்படி வீதி பயணிகள் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாதளவிற்கு சேதமடைந்துள்ளது.

எனவே இவ் வீதியினை பருவமழைக்கு முன்னர் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-9,60)

# வன்முறையில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல் விதிப்பு

## மருத்துவ பரிசோதனைக்கும் உத்தரவு

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் குடும்ப வன்முறையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 21-ம் திகதி வரை விளக்கமறியலில் வைத்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டது.

மேற்படி பிரதேசத்தில் குறித்த குடும்பஸ்தர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை அடித்து துன்புறுத்தியதுடன் வீட்டு உபகரணங்களையும் சேதப்படுத்தியதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் மனைவியினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த குடும்பஸ்தர் ஏற்கெனவே நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார். அதற்கு வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்று வந்துள்ளார்.

எனவே இக்குடும்பஸ்தர் அந்நோயினாலேயே இவ்வாறு செயற்படுகின்றார் என நீதிமன்று கருதுவதால் குறித்த குடும்பஸ்தரை எதிர்வரும் 21-ம் திகதி வரை சிறைச்சாலை உத்தியோகத்தர் ஊடாக வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.(செ-9,24)

## யானை தாக்கி ஒருவர் பலி

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மத்திய முகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை நடந்த இந்த சம்பவத்தில் மத்திய முகாம் 18-ம் கொலனியை சேர்ந்த 35வயதான ஜகத் சந்திரகுமார என்பவரே உயிரிழந்தாக மத்திய முகாம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரோஹண முனசிங்க தெரிவித்தார்.

இவர் நேற்று அதிகாலை 5.30 அளவில் வீட்டில் இருந்து வேலைக்கு புறப்பட்டுச் சென்ற போது வீட்டுக்கு அருகில் நின்ற யானைஅவரை தாக்கியுள்ளதுடன் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்எனவும் முனசிங்க கூறினார்.

அம்பாறைமாவட்டத்தில் அண்மைக் காலமாககாட்டுயானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளதுடன் அவை கிராமங்களுக்குள் ஊடுருவி வருகின்றதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (செ-11)


### 5ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20-05-1945 | மறைவு 03-08-2008

அமரர்
தங்கராசா நிர்மலாதேவி

இயற்கையின் நியதியிலே எமை
எல்லாம் தவிக்க விட்டு
விதி விதித்த வலைதனிலே வீழ்ந்து
விட்ட என் அம்மம்மா
ஆற்வார் பலர் இருந்தும்
ஆறவில்லை எம் மனங்கல்
அல்லல்கள் ஏதும் இன்றி
ஆண்டவன் அடி
சென்று அமைதியாய் உறங்குகிறீர்

கணவன், மகள்,

சந்நிதி கிழக்கு,
தொண்டைமானாறு.
(C-4254)



### தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-4240) T.P: No.:-021 222 5392



### பிள்ளையார் இன்

இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு:**

✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)

(C-4241)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


### மரண அறிவித்தல்

**இளையதம்பி கமலகரன் (கரன்)**



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி-கமலகரன் (கரன்) 07.08.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தங்கம்மாவின் அன்பு மகனும், சிவசரணம் காலஞ்சென்ற இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்புச் சகோதரனும், சிவகுணதேவியின் அன்புக் கணவரும், தியாகலிங்கத்தின் அன்புச் சகோதரனும், யஜுசன், வருஜா, யனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.08.2013 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (C-4255) தகவல்:குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பொய் முகம்

"எனக்கு இருக்கும் குழப்பத்தில் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல் இருக்கிறது சேர்"என்றார் எனது நண்பர்.

ஏதோ இதுவரையில் அது பிடிக்காதது போல மனதில் குழப்பம் இல்லாத மனிதன் யார்? "என் மனதில் குழப்பமே இல்லை சேர் நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன்"என்று ஒருவர் கூறுகிறார் என்று வையுங்கள். அது அவரே அவரைப் பற்றி தெரியாமல் கூறும் வார்த்தை.

இப்போது உங்கள் மனதில் குழப்பம் இருக்கிறா? இல்லையா? என்பதை நீங்களே தெரிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது என்றார் ஒரு பெரியவர். அது என்ன தெரியுமா? யாருமில்லாத இடத்தில் ஒரு தனி அறைக்குள் நுழைந்து பூட்டிக் கொள்ளுங்கள். ஒரு வானொலியில் "ரெக்கோர்ட்"போட்டு விடுங்கள். உங்கள் மனதில் வருவதை சிறிது கூட மறைக்காமல் சத்தம் போட்டுச் சொல்லுங்கள் என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே கூறிவிட வேண்டும். அதில் அர்த்தம் எல்லாம் பார்த்துக் கொண் டிருக் கக்கூடாது. மனசு விட்டுப் பேசுங்கள். சத்தம் போடுங்கள். கால் மணி நேரம் கழித்து நீங்கள் பேசியவற்றையெல்லாம் போட்டுக் கேளுங்கள். பைத்தியம் பிடித்த ஒருவரின் பேச்சை நீங்கள் கேட்டது போலத் தோன்றும். உங்களுக்குள் எவ்வளவு குழப்பம் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்று புரியும். எவ் வளவு அபத்தமான எண்ணங்கள் நமக்குள் இருக்கிறது என்பது புரியும். ஒன்றுக்கொன்று தொடர்பில் லாத துண்டுகள் நம் மனதுக்குள் மிதக்கிறது என்பது விளங்கும்.

இது உண்மை. நீங்கள் வேண்டுமானால் பரீட்சித்துப் பாருங்கள். இதற்கு அர்த்தம் என்ன? பைத்தியக்கார விடுதியில் இருப்பவனுக்கு நூறு சதவீதம் பைத்தியம் பிடித்திருக்கிறது. நமக்கு எவ்வளவு இல்லை. ஆனாலும் நமது நிலை வெளியில் தெரிவ தில்லை.

நாம் சரியான மனநிலையில் இருப்பது போல் தெரிகின்றோம். மற்றவர்களிடம் இருந்து நாம் நிறைய,மறைத்து விடுகின்றோம். இதற்காக நாம் தினமும் காலையிலிருந்து இரவு தூங்கப்போகும் வரை சந்திக்கும் நபர்களுக்குத் தகுந்த மாதிரி நமது முகமூடி மாறிக் கொண்டே இருக்கும். இதில் நாம் மற்றவர்களை மட்டும் ஏமாற்றுவதில்லை. நம்மையும் நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். ஆளுக்குத் தகுந்த மாதிரி நமது முகத்தை மாற்றிக் கொண்டு பொய் முகத்துடன் காட்சியளிக்கின்றோம் என்பதை நாம் கவனிப்பதில்லை. அதனால் நமது உண்மையான முகம் எது என நமக்கே தெரிவ தில்லை. நமது பொய்களை நாமும் நம்பிக் கொண்டு மற்றவர்களையும் நம்ப வைக்கும் காரியத்தைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். சரி இதெல்லாம் இருக்கட்டும். மனதில் இருந்து குழப்பங்களை நீக்குவது எப்படி? நிதான நிலையை அடைவது எப்படி? என்று கேட்டால் அதற்கும் பதில் சொல்கிறார் அந்தப் பெரியவர்.

ஒரு பைத்தியக்காரன் என்ன நினைக்கிறான் என்றால் மற்றவர்களைப் பைத்தியம் என்று நினைக்கிறான். தனக்குப் பைத்தியம் என்பது அவனுக்கு தெரிய ஆரம்பித்தால் அவன் நிதான புத்தியை அடையவாய்ப்புள்ளது.

அதனால் நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? நாம் நிதானம் தவறிய நிலையில் இருப்பதை முதலில் உணர்ந்து விட்டால் போதும்.நிதான நிலைக்கு நாம் முன்னேறி விடலாமாம். நமக்கு ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தான் பொறுப்பு என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். நமக்குள் ஒரு சரியான மையத்தை ஏற்படுத்தி அதில் நமக்கு நாமே எஜமானாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சரியான திசையில் நம்மை நாமே கொண்டு செல்ல வேண்டும். இந்த வேளையில் நாம் தீவிரமாக செயற்பட்டால் அதன்பின்பு நாம் பொய் முகத்துடன் அலைய வேண்டிய அவசியமில்லை.

உண்மை முகத்துடன் நிதான நிலையில் பேரானந்தம் அடையலாம். சிரித்து வாழலாம். இப்படியெல்லாம் பெரியவர்கள் கூறுகின்றனர். நம் அளவிற்கு இவை எந்தளவு சாத்தியமென்று தெரியவில்லை. இருந்தாலும் முயற்சி செய்வோம். முடிந்தளவு முன்னேறுவோம். நமக்குத் தெரிந்த முகம் வேறு மாதிரி. ஒரு ஆள் இன்னொருவனிடம் கேட்டான். "ஏன் சேர் இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகத்துடன் ஒன்பது பேர் இருப்பதாக சொல்கிறார்களே! அது சாத்தியமா?"என்றான். "சாத்தியம்தான் ஏன் அப்படிக் கேட்கிறாய்?"என்றான் அவன். "அதற்கில்லை போன மாதம் உன்னிடம் நான் வாங்கியிருந்த ஆயிரம் ரூபாவை நேற்று உன்னை மாதிரியே இருந்த ஒருவன் வந்து திரும்பி வாங்கிக் கொண்டு போய் விட்டான். அதனால்தான் கேட்டேன்"என்றான் இவன்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான பிரபாகரனை யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை கடற்படையினருக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்து யுத்தம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் உரும்பிராயைச் சேர்ந்த தமிழழகன் என அழைக்கப்படும் எஸ்.பிரபாகரன் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் இவர் மீது யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது இவரால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் ஒரு சான்றாக மன்றில் ஒப்படைக்கப்பட்டது.

இதில் சந்தேக நபர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி அவ்வாக்குமூலம் குறித்த நபரால் சுயமாக வழங்கப்படவில்லை. வற்புறுத்தியே பெறப்பட்டுள்ளது என வாதாடியிருந்ததைத் தொடர்ந்து குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கட ந்த 18 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்நபருக்கு எதிராக வேறேதும் குற்றச் சான்றுகள் உள்ளனவா? என்பதை ஆராயும் முகமாக குறித்த வழக்கு நேற்று மீண் டும் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது அந்நபருக்கெதிராக வேறு குற்றச் சாட்டுக்கள் இல்லாமை யினால் அவரை நிரபராதி என கண்ட மன்று அவரை விடுதலை செய்வதாக தீர்ப்பு வழங்கியது. (அ-4)

# பிரதேசத்தின் அபிவிருத்திக்கு போக்குவரத்தும் அவசியம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்படும் பிரதேசங்களுக்கான போக்குவரத்து பேருந்து சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் கிராம மட்டத்தில் போக்குவரத்துச் சேவைகளை விருத்தி செய்வதன்மூலம் யாழ்.மாவட்டம் அபிவிருத்தியை நோக்கி விரைவில் பயணிக்கும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் போக்குவரத்து ஆணைக்குழுவின் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் போக்குவரத்தும் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ், பயணிகள் சேவை வழியனுமதிப்பத்திரம் வழங்கும் சேவை கடந்த 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இச்சேவை வழியனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் 520 பேருந்துகள் மட்டும் சேவையில் ஈடுபட்டுள்ளன. ஏனைய பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட இடங்கள் உட்பட கிராம மட்டங்களில் போக்குவரத்துச் சேவையை விருத்தி செய்வதன் மூலம் அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிக்க முடியும்.

மேலும் மாவட்டச் செயலகத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலர் யாழ். மாவட்ட மக்களுக்கு போக்குவரத்து சேவையை முழுமையாக வழங்குவதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-140 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 120 | 100 |
| தக்காளி | 60 | 30 | 100 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 120 | 100 |
| கரட் | 100 | 100 | 140 | 180 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 140-180 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 70 | 40 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | — | 100 |
| பயற்றங்காய் | 60 | 70 | 60 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 30 | 35 | 80 | 60 |
| கறிமிளகாய் | 60 | 40 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 30 | 70 | 160 | 80 |
| போஞ்சி | — | 100 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 110 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | — | 90 | 120 | 120 |

# இராசி பலன்

08.08.2013
(ஆடி 23, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துதியை பின்னிரவு 5.53 மணிவரை
மகம் பின்னிரவு 12.29 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்** பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** இறை வழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள், குடும்பச் சுமை கூடும், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், மனச் சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், எதிர் கால வெற்றிக்கு திருப்பு முனையான நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், தொலைபேசி செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** எதிர்பாராத பயணங்கள் கைகூடும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதி யும் தொடர்வீர்கள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், குடும்பத்தில் சில வாக்கு வாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாபரிப்புப்பணம் செலுத்தாத குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் தாபரிப்பு வழக்குடன் தொடர்புடைய குடும்பஸ்தர் ஒருவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன் கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் குறித்த குடும்பஸ்தர் தாபரிப்பு வழக்கொன்றில் நீதிமன்ற கட்டளைக்கு அமைய மனைவிக்கு தவணை அடிப்படையில் 66 ஆயிரம் ரூபாவை தாபரிப்பு பணமாக செலுத்தாமையினாலும் நீதிமன்ற பிணையை நிவர்த்தி செய்து பதிவாளரிடம் சமர்ப்பிக்காமையினாலும் இந்நபர் கடந்த தவணை விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்தார்.

இவ்வழக்கு விசாரணை மீண்டும் நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு அந்நபர் தொடர்ந்தும் தாபரிப்புப் பணம் செலுத்தாமையினாலும் பிணையை பூர்த்தி செய்யாமையினாலும் அவரை தொடர்ந்தும் இம் மாதம் 21 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். (அ-9-24)




# அடிப்படை வசதிகளை ஏற்படுத்த கோரி குப்பிளான் வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வறுமையில் வாழும் மக்களுக்கு வழி இல்லையா? வறியவர்கள் வாழ்வுக்கு முடி வில்லையா? என்ற வாசகங்களுடன் மீள் குடியமர்த்தப்பட்ட ஜே/211 குப்பிளான் வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மீளக்குடியமர்ந்த எமக்கு வீட்டுத்திட்டம் உட்பட அடிப்படை வசதிகள் எவற்றையும் அரசு வழங்கவில்லை என தெரிவித்தே வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலக வளா கத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கணிசமான மக்கள் கலந்து கொண்டிருந்ததோடு தம்முடைய கோரிக்கைக்கு அரசு பதில் தரும் வரை தாம் இவ்விடத்தை விட்டு விலகப் போவதில்லை எனவும் தெரிவித்திருந் தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மக்கள் தெரிவிக்கையில்,

குப்பிளான் வடக்கு கிராம மக்கள் ஆகிய நாம் 1990 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இடப்பெயர்வு, சொத்தழிவு என பல அவலங்களுடன் வாழ்ந்து வந்த நிலையில் 2011 ஆம் ஆண்டில் எமது காணிகளில் மீண்டும் குடியிருக்க அனுமதிக்கப்பட்டோம்.



எம் காணிகளில் இருந்த வீடுகள், மலசல கூடம், கிணறுகள் என்பன யுத்தத்தால் அழிக்கப்பட்ட நிலையில் தகர கொட்டைகளை அமைத்துக் கொண்டு இருந்தால் தான் நிரந்தர வீட்டுத்திட்டம் கிடைக்கும் என கூறப்பட்டதற்கு இணங்க, கொட்டில்கள் அமைத்துக் கொண்டு வசித்து வருகின்றோம். எனினும் இவ்வாறு நாம் வாழ ஆரம்பித்து 6 மாதகாலமாகியும் சொந்த வீடு, மலசலகூடம், மின்சாரம், குடிநீர் போன்ற வசதிகள் ஏற்படுத்தி தரப்படவில்லை.

எமது அயலிலுள்ள குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய கிராமங்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கும் போது குப்பிளான் வடக்கு கிராமத்தில் வாழும் எமக்கு மட்டும் வீட்டுத்திட்டம் கிடைக்காத காரணம் என்ன?

இடப்பெயர்வால் நாம் இழந்து போன வீடு, குடிநீர், மலசலகூட வசதிகளை விரைந்து ஏற்படுத்தி தருமாறு கோரியே இவ் ஆர்ப்பாட்டத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம் என அவர்கள் தெரிவித்தனர். இம் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் உடுவில் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் கலந்து, கொண்டிருந்த மக்கள் வீடு, மலசலகூடம், நிவாரணம், மின்சார வசதி போன்ற எமது நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு முடிவு கூறும்வரை இவ்விடத்தை விட்ட நகர மாட்டோம். மீள்குடிய மர்ந்த ஜே/211 குப்பிளான் மக்களுக்கு அரசி னால் உதவிகள் வழங்கப்படவில்லை, நம்பி வந்த மக்களுக்கு நல்லதோர் முடிவு கிடைக்குமா?, மக்களுக்கு எவ்வித உதவிகளும் இல்லாதபோது கிராம சேவையாளர் அலுவலகம் எமக்கு வேண்டாம் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

மேலும் பற்றைகளுக்கு மத்தியிலும் இராணுவத்தினருக்கு அருகிலும் மலசலகூடங்களோ, பாதுகாப்பான இடங்களோ இல்லாத நிலையிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-4)




# 34 இந்திய மீனவர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 34 தமிழக மீனவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தர விட்டுள்ளது.

மேற்படி கடற்பரப்பில் கடந்த 30 ஆம் திகதி இரவு 9 மணியளவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 5 ரோலர் படகுகளில் 34 மீனவர்கள் அத்துமீறி இலங்கையின் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை இம் 34 மீனவர்களும் பருத்தித்துறை நீதிமன்றின் கட்டளையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான், 34 மீனவர்கள் தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட வேண்டியது எனவும் பருத்தித்துறை நீதிமன்றினால் பிணை வழங்க முடியாதெனவும் சுட்டிக்காட்டினார்.

மீனவர்களுக்கு ஆதரவாக மன்றில் இந்திய துணைத் தூதரக பெண் அதிகாரி திருமதி றோபேட் பிரியதர்ஷி மன்றில் ஆஜராகி இந்திய தூதரகம் இலங்கை அரசிடம் இது தொடர்பாக கலந்துரையாடி வருவதாகவும் அதற்கான பதில்கள் சில தினங்களில் கிடைக்கப் பெறுமெனவும் நீதவானிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து 34 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)

# உரிய ஆவணங்களின்றி பயணிப்பு பெண்ணுக்கு அபராதம் விதிப்பு!

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளை வருமான வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இன்றி செலுத்திச் சென்ற பெண்ணொருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக வழங்க பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் சம்பவதினம் இப் பெண் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வேளை வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரமின்றி செலுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதவான் அப் பெண் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து அவரைக் குற்றவாளி எனக் கண்டு இரு குற்றச்சாட்டுக்களுக்கும் பத்தாயிரத்து 500 ரூபாவை அபராதமாக செலுத்துமாறு உத்தர விட்டார். (அ-9-24)



வட மாகாண தொழில் திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாகாண கிராமிய கைத்தொழில் கண்காட்சி நேற்றைய தினம் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகரன், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் அருகில் நிற்பதையும் ஆளுநர் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய பிரதேசத்தில் இப்படியென்றால் முள்ளிவாய்க்காலில் எப்படி இருந்திருக்கும்?

## ஒப்பீடு செய்கிறார் மனோ

(கொழும்பு)

**இராணுவம் வெலிவேரியவில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகளை நடத்தி இத்தகைய விபரீதங்களை நடத்தியிருக்குமானால், வன்னியிலே யுத்தத்தின் போது இதே இராணுவம் தமிழ் மக்கள் மீது எத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி யிருக்கும் என்ற கேள்விகள் தற்போது தெற்கில் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றன.**

இந்த கண்மூடித்தனமான தாக்குதல்க ளுக்கு ஆணையிட்டது யார்? என்ற கேள்வி உரக்க கேட்கப்படுகின்றது. தென்னிலங்கை யின் பெரும்பான்மை அரசியல் கட்சி தலை வர்கள், தேரர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகி யோர் இப்போது இந்தக் கேள்விகளை எழு ப்பி வருகின்றார்கள்.

இங்கே இன்று இப்படி என்றால் அன்று வன்னியில் எப்படி? என்ற கருத்துக்களை கேட்கும் போது என் உடம்பு புல்லரித்து மயிர் கூச் செறிகின்றது. என் நெஞ்சம் கனக்கிறது. என் கண்களில் கண்ணீர் தளும்புகின்றது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப் படும் இயக்கம் இன்று கொழும்பில் நடத்திய ஊடக மாநா ட்டில் மனோ கணே சன் சிங்கள மொழி யில் உரையா ற்றிய போதே இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து உரையா ற்றுகையில்,

அப்பாவி தமிழ் மக்கள் சிக்கி தவி ப்பதை அறிந்தும் அறியாதது போல் புலிகளை கொல்கின்றோம் என்ற பெயரில் அப்பாவி தமிழ் மக்கள் மீது பல்குழல் எறி கணைத் தாக்குதல்களை இராணுவம் கண் மூடித்தனமாக நடத்தியது.

அதனைத்தான் உலகம் நிறுத்தக் கோரியது. புலிகளைப் பாதுகாக்க சொல்ல வில்லை. அப்பாவி மக்களைக் கொலை செய்ய வேண்டாம் என உலக சமூகத்துடன் சேர்ந்து நாமும் கூறினோம். அதைக் கூறிய எங்களைப் பார்த்து பயங்கரவாதிகள் என்றும் புலிகள் என்றும் பிரிவினைவாதிகள் என் றும் இங்கே முத்திரை குத்தி பயமுறுத்தினார்கள்.

இன்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வெலிவேரிய இராணுவ துப்பாக்கிச் சூட்டை விசாரிக்க சர்வதேச விசாரணை தேவை என்று கூறுகிறது. இதைத்தான் நாங்களும் அன்று வன்னி யுத்தம் தொடர்பில் கூறி னோம். வன்னியில் அப்பாவி மக்கள் கொல் லப்பட்டதை நிறுத்தும்படியும் கூறினோம். அங்கு நடைபெற்ற படுகொலைகள் தொடர்பில் சர்வ தேச விசாரணை தேவை என்றும் கூறினோம்.

இப்போது திரும்பவும் நாம் சொல்கின் றோம் முள்ளிவாய்க்கால் படுகொலைகள் பற்றி சர்வதேச விசாரணை தேவை. அதே போல் வெலிவேரிய படுகொலைகள் தொட ர்பிலும் சர்வதேச விசாரணை தேவை.

துப்பாக்கிச் சூடு நடத்த ஆணையிட்டது யார்? இராணுவ தளபதியா? பாதுகாப்பு செயலாளரா? ஜனாதிபதியா? இந்த கேள் விக்கு இந்த நாட்டு மக்களுக்கு பதில் கூற முடியாவிடின் சகலமும் முடிந்து போய்வி டாது. இதோ அதோ என்று இந்த மாத இறுதி யில் ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீ தம்பிள்ளை இலங்கை வருகின்றார். அவரு க்கு நீங்கள் இவற்றுக்கான பதில்களைக் கூறியே ஆக வேண்டும். பதில் கூறினாலும் கூறாவிட்டாலும் இந்த விடயங்கள் இந்த செப்டெம்பரிலும் அடுத்த மார்ச்சிலும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் ஒலிக்கத் தான் போகி ன்றன. இராணுவத்தை ஏவிவிட்டு தமிழ் மக்கள் மீது எத்தகைய தாக்குதல்களை இந்த அரசு நட த்தியிருக்கக் கூடும் என்பதை சிங்கள மக்கள் இப்போது அறிந்து கொள்ள வேண்டும்.

போர் முடிவுக்கு வந்து விட்ட இன்று தமிழ் மாகாணங்களில் இருந்து இராணுவத்தை ஏன் அகற்ற சொல்கின்றோம் என்பதையும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை சிவில் திணைக்களமான பொலிஸ் திணைக் களத்திடம் ஒப்படையுங்கள் என ஏன் சொல்கி ன்றோம் என்பதையும் இனியாவது சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். (அ-2)

நம்பிக்கையீனமா? மனத் தளர்வா?

தற்கொலை எண்ணமா?

உங்களுக்கு யாருமே இல்லை என்ற வெறுமையா?
வாழ்க்கையில் வெறுப்பா?
உங்களுக்குக் கைகொடுக்க நாங்கள் காத்திருக்கின்றோம்.

உங்களை விளங்கிக் கொள்ளவும் உங்களை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளவும் எம்மால் முடியும். உங்களை நாம் ஆதரவுடன் செவிமடுப்போம். உடனே அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.
(காலை 9 மணி முதல் மதியம் 01 மணிவரை) (3558)

**கை கொடுக்கும் நண்பர்கள் :** (Srilanka Sumithrayo)
**தொலைபேசி: 021 222 8117**
(உங்கள் இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்)




சிறந்த வருமானத்தை* வழங்கும் நிலையான வருமான வழியொன்றில் முதலீடு செய்யும் முறை சம்பந்தமாக நாம் நடத்தும் இலவச கருத்தரங்கில் பங்குபற்றி புதிய முதலீட்டு வழி பற்றிய சகல புதிய தகவல்களையும் அறிந்துகொள்ளுங்கள்.

| திகதி | இடம் | விபரங்களுக்கும் பதிவிற்கும் | நேரம் |
|---|---|---|---|
| ஓகஸ்ட் 10 | கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ் - கிளை, 147- 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | தொலைபேசி: 021-2221455 0777-822014 | மு.ப. 9.00 – நண்பகல் 12.00 |

SAATCHI & SAATCHI

*தற்போதய திறைசேரி உண்டியல் வீதத்தைவிடக் கூடுதலானது.

CSE COLOMBO STOCK EXCHANGE

(சி/4239)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா:9.5<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: BCom, Dip in Eduஆசிரியர்<br>தொ.இ:B2173 | பிறப்பு: 1986 இந்து(Pa)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5’<br>கி.பா : 34.75 செவ் 8<br>தகைமை/தொழில்: A/L, GAQ<br>தொ.இ:G2201 |
| பிறப்பு: 1975 இந்து(SEDDI)<br>நட்சத்திரம்:விசாகம<br>உயரம்: 5’6”<br>கி.பா : 48<br>தகைமை/தொழில்: A/Lகடை<br>தொ.இ:B2176 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா : 43<br>உயரம்: 162 Cm<br>தகைமை/தொழில்: Dip in English ஆசிரியர்<br>தொ.இ:G2202 |
| பிறப்பு: 1981 இந்து(KO)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 29 செவ் 12<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்: O/L சாரதி சொந்த வாகனம்<br>தொ.இ:B2177 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா : 40<br>உயரம்: 5’ 4"<br>தகைமை/தொழில்: HNDE, மேக்கப்<br>தொ.இ:G2204 |
| பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5’5”<br>கி.பா : 17.5 செவ் 4<br>தகைமை/தொழில்: Dip in Commerce, Marketting Supperviser அவுஸ்திரேலியா PR<br>தொ.இ:B2180 | பிறப்பு: 1977 இந்து(V,K)<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா : 62.25 செ 7<br>உயரம்:5’ 6"<br>தகைமை/தொழில்: A/L, Pharmacy கிராம சேவையாளர்<br>தொ.இ:G2206 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாடு ஏற்பாடுகளை பார்வையிட பிரதிநிதிகள் வருவர்

(கொழும்பு)

**பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்கென 18 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு இம்மாதம் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான உத்தியோகபூர்வ பேச்சாளர் அனுராதா ஹேரத் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை வரவுள்ள நிலையில் இன்னுமொரு குழுவினர் இம்மாதம் 23 ஆம் திகதி இங்கு வரவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆகக்கூடியது ஒன்று தொடக்கம் மூன்று தினங்கள் வரை கொழும்பில் தங்கியிருப்பர். இப்பிரதிநிதிகளுக்கு பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளும் எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன.

இலங்கை வரவுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் உள்ளிட்ட முக்கிய வெளி நாட்டுத் தலைவர்களுக்கு உச்சி மாநாடு தொடர்பிலான ஏற்பாடுகள் மற்றும் அவர்கள் தங்கியிருப்பதற்கான வசதிகள் குறித்து நேரில் கண்டறியும் முகமாகவே அந்நாடுகளின் பிரதிநிதிகள் குழு இம்மாதம் இலங்கை வர திட்டமிட்டுள்ளது.

முன்கூட்டிய வருகைக்கென இது வரையில் 18 நாடுகள் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளதாகவும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடுமெனவும் அனுராதா தெரிவித்தார்.

முன்கூட்டிய வருகையில் கலந்து கொள்ளும் சர்வதேச பிரதிநிதிகள் குழு தமது நாட்டுத் தலைவர்கள் தங்குமிடம், அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நேரில் கண்டு ஆராய்வரெனவும் வெளிவிவகார அமைச்சு கூறியது. (அ-2)

# மலையகத்தில் தொடரும் மழை;8000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

மலையகத்தில் பெய்த மழை காரணமாக இடம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் குமார தெரிவித்துள்ளார்.

மழை, வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக கண்டி மற்றும் நுவரெலிய மாவட்டங்களில் 11 நிவாரண நிலையங்களில் இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 48 மணித்தியாலங்களுக்குள் நோட்டன் பிரதேசத்திலேயே ஆகக்கூடியதாக 56.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

கடந்த இரு தினங்களுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சியினளவு குறைவாக இருந்த போதிலும் தென்மேல் பருவப் பெயர்ச்சி காரணமாக மத்திய மாகாணத்தின் மேற்கு மலைச்சாரலில் அவ்வப்போது மழையுடன் கூடிய காலநிலை தொடருமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெய்த மழை காரணமாக 2 ஆயிரத்து 366 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 3 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் பெய்து வந்த மழையின் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்ததையடுத்து மேல் கொத்மலை, விக்டோரியா, கெனியன், லக்சபான, காசல்ரீ, கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டிருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை புத்தளத்திலிருந்து காலியூடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்பிலும் நாடு முழுவதும் வீசக்கூடிய காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வெலிவேரிய சம்பவம் குறித்து கவனம் செலுத்துகின்றோம்

## பிரித்தானியா தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது. அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டத்தின் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த, காணாமற் போனவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தும் உரிமையை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, வெலிவேரிய சம்பவத்திற்கு அண்மையில் அமெரிக்காவும் கண்டனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் கடந்த சித்திரை மாதம் நடத்தப்பட்ட சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தவர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு,

**2 ஆம் பிரிவில் சித்தியடைந்தோர்**

முருகுப்பிள்ளை சங்கரலிங்கம் (மண்டூர்), இளையதம்பி கோபாலப்பிள்ளை (தேத்தாதீவு), கிருபாதேவி வீரசிங்கம்(கொழும்பு), கிருபன் வெள்ளைச்சாமி(தெஹிவளை).

**3 ஆம் பிரிவு சித்தியடைந்தோர்**

பாலன் சுதாகரன்(பொலநறுவை), தில்லைநாதன் சதானந்தன் (மட்டக்களப்பு), பாலகிருஸ்ணன் திலகானந்தம் (ஒட்டுசுட்டான்), சி.கார்த்திகைக் குமரன் சரவணமுத்து(கொழும்பு), திருமதி பத்மாவதி தங்கராஜா(கொழும்பு).

மேற்படி தேர்வுகளுக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் அவரவர் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சைவப்புலவர்தேர்வில்சித்தியடைந்தவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட தலைப்புக்களில்தயாரித்தஆய்வுக்கட்டுரைகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2014 ஆம் ஆண்டு மேற்படி பரீட்சைகளுக்கு தோற்ற விரும்புவோர் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு மேலதிகதகவல்களுக்கு0112739238 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# வெலிவேரிய தொழிற்சாலைக்கு எதிராக குரல் கொடுக்காதது ஏன்?

## அமைச்சர் மேர்வின் கேள்வி

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் அரசியல்வாதிகள் மௌனம் காத்து வருவதாக பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் சிலர் மௌனம் காத்துவருவதாகவும்தேவை ஏற்படின் அவர்களது பெயர் விபரங்களை வெளியிட நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

களனியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், குறித்த தொழிற்சாலைக்கு எதிராக குரல் எழுப்ப எவரும் முன்வரவில்லை. செல்வந்தர்களுக்கு எதிராக குரல் கொடுக்க பலரும் அஞ்சுகின்றனர். கம்பஹா பிரதி மேயரும் நானும் இணைந்து இந்தத் தொழிற்சாலையை இரண்டு நாட்கள் மூடியுள்ளோம். களனியையும் கம்பஹாவையும் விட்டு நான் விலகப் போவதில்லை. மக்கள் எனது சேவையை எதிர்பார்க்கின்றபோது எவராலும் என்னை இங்கிருந்து விரட்டியடிக்க முடியாது.

களனி பிரதேசத்திற்கு நான் அவசியமா இல்லையா? என்பதை ஓர் தேர்தலை நடத்துவதன் மூலம் முடிவு செய்யலாம் என்றார். (அ-2)




யாழ். முகாமையாளர் சம்மேளனம் நடத்திய கருத்தரங்குத் தொடரின் 112 ஆவது கருத்தரங்கு வர்த்தக உயர்விற்கான சமூகப் பொறுப்புக்கள் எனும் தலைப்பில் அண்மையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் போது சட்டத்தரணி டி.இரங்கன் வரவேற்புரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

# பிரசாரத்திற்காக சட்டவிரோதமாக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன

## கபே அமைப்பு தெரிவிப்பு

வடமேல் மாகாணத்தில் 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பிரசாரத்திற்காக சட்ட விரோதமாக பயன்படுத்தப்படுவதாக கபே தெரிவித்துள்ளது. வடமேல் மாகாண தேர்தல் பிரசார பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு வாகனங்கள் போலி இலக்கத் தகடுகளுடன் கூடியவை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் அரச சொத்துக்களைப் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வடமேல் மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனங்கள் பிரசார பணிக்கு பயன்படுத்தப் பட்டமை குறித்த புகைப்பட ஆதாரங்களை கபே திரட்டியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மீறப்படுமாயின் மக்கள் சட்டம் ஒழுங்கு மீது கொண்டுள்ள நம்பிக்கை வலுவிழந்து போகக் கூடும் என கபே சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர்தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (அ-5)

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் ஊழல் மோசடிகள் தொடர்பில் எமக்கு அறிவிக்குக

## அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு

(கொழும்பு)

**மின்சார சபையில் ஊழல் மோசடிகள் நடைபெறுவதாக இருந்தால் அது தொடர்பாக தனக்கு அறிவிக்குமாறும் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கதான் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

மின்சார சபை தலைமையகத்தில் இடம் பெற்ற மின்சார சபை ஊழியர்களை அறிவூட்டும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நான் பதவியில் இருக்கும் வரை மின்சார சபையில் திருட்டோ மோசடிகளோ இடம்பெற அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள சகல மின் உற்பத்தி நிலையங்களையும் துரிதமாக செயற்படுத்தவே அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது. நுரைச்சோலை இரண் டாம் கட்டத்தினுடாக மேலும் 300 மெகாவோ ர்ட் மின் உற்பத்தி இந்த வருட இறுதியில் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்.

சம்பூர் அனல் மின்நிலையத்தினூடாகவும் 500 மெகா வோர்ட் மின்சாரம் உற்பத்தி செய்யவதற்கு திட்டமிட்டுள்ளோம். புறொட்லண்ட் நீர்மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பணிகள் 2017 இல் பூர்த்தி செய்யப்பட்டவுடன் 39 மெகாவோர்ட் மின் சாரம் தேசிய கட் டமைப்பிற்குக் கிடைக்கும்.

உமா ஓயா மின் உற்பத்தி நிலைய பணிகளும் துரிதமாக இடம்பெறுகின்றன.

சம்பூர் அனல் மின் நிலையம் நிர்மாணப் பணிகள் இந்த வருடத்தினுள் ஆரம்பிக்கப்படும். மொறகொல்ல மின் உற்பத்தி நிலையத்திற்கான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

இந்த அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் செயற்படத் தொடருமாயின் மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரம் வழங்க முடியும். இதற்காகவே அரசாங்கம் அதிகமான மின்உற்பத்தி திட்டங்களை ஆரம்பித்துள்ளது.நான் அமைச்சு பதவியை ஏற்கும் போது மின்சார சபை ஏனைய நிறுவனங்களுக்கு 364 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. இதற்கு 2 மாற்றுவழிகள் இருந்தன.

ஒன்று மின் வெட்டு மற்றையது மின் கட்டணத்தை அதிகரிப்பது. வறிய மக்களுக்கு மின்சாரத்தை துண்டிக்காமல் வழங்குவதே எமது நோக்கம் என்றார். (அ-2)

## ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர்- வடமராட்சி
மு.ப.8.00-10.00
அல்லையம்பதி முருகன் கோயில்
மு.ப. 11.00 - இரவு
கோயிற்கடவைப் பிள்ளையார் கோயில்
இளைஞர் நிகழ்வு
1. காலை 11.00-12.30
2.மாலை 6.00-7.30
மாலை 3.30 பெண்கள் வலுவூட்டல் நிகழ்வு
ஸ்ரீ சோமநாதர்- வலிகாமம்
மு.ப. 7.00- பி.ப. 2.00
பனிப்புலம் அம்மன் கோயில் தரிசனம்
காலை 9.00-10.30 இளைஞர் நிகழ்வு
பி.ப. 4.00-6.00
பண்ணாகம்விஷவத்தனைமுருகன்கோயில்
இரவு
வடக்கும்புரை அம்மன் கோயில்
இராமேஸ்வரம்-கிளிநொச்சி-தென்மராட்சி
மு.ப. 10.00
கணேசபுரம் பிள்ளையார் கோயில்
பி.ப. 12.00- திருநகர்
பி.ப.1.30- ஜெயந்தி நகர்
பி.ப. 3.00- உருத்திரபுரம்
8 ஆம் வாய்க்கால்
10 ஆம் வாய்க்கால்
இரவு- பொறிக்கடவை அம்மன் கோயில்

## கப்பம் பெற்றவருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

பிரெஞ்சுப் பெண் ஒருவரிடம் கப்பம் பெற்ற இலங்கையர் ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கொள்ளுபிட்டியைச் சேர்ந்த துவான் சலீம் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு பெண் ஒருவரிடமிருந்து மூவாயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டமையே இவர் மீது சுமத்தப்பட்ட குற்றமாகும்.

இந்திய விசா பெற்றுத் தருவதாகத் தெரிவித்தே இப் பெண்ணிடம் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலா விசா மூலம் இலங்கை வந்த அப் பெண்ணிடம், இவ்வாறு பணம் கப்பமாக பெறப்பட்டுள்ளது. மன்றில் இக் குற்றச் செயலை ஒப்புக் கொண்ட நபருக்கு ஆறு மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வாஸின் மகன் கைதானார்

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மகன் ரவிந்து குணவர்த்தன கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றத் தடுப்புப் பிரிவினரால் பெப்பிலியான பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சியாமின் கொலை தொடர்பில் ரவிந்து குணவர்த்தனவிற்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பிலும் ரவிந்துகுணவர்த்தனவுக்கு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)


# UNIVERSITY OF JAFFNA

## INVITATION FOR BIDS

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs) | Contract Period | Minimum Required Grade ICTAD | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/RE/ 2013-13 | Chain Link Fencing at Graduate Studies and Allied Health Science Unit, University of Jaffna. | 3.2 million | 90 Calendar Days | Building/ C8 or above | Rs. 32,000.00 | 26th December 2013 |
| 2 | YA/CWP/RE/ 2013-14 | Improving Facilities at Kanagasuntheram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 4.2 million | 90 Calendar Days | Building/ C8 or above | Rs. 42,000.00 | 26th December 2013 |
| 3 | YA/CWP/AG/KLN/ 2013-WS | Construction of Panel Room and Water Supply System at the Faculty of Agriculture, Ariviyalnagar, Kilinochchi. | 14.1 million | 90 Calender Days | Building/ C6 or above | Rs. 140,000.00 | 26th December 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 8th August 2013 until 26th August 2013** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of rupees one thousand five hundred **(Rs.1500/-)** for works No 1 and 2 and rupees Four thousand (Rs. 4000/-) for work No 3.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna to reach on or before 14.00 hrs on the 27th August 2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter **on 27th August 2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of "**Vice Chancellor, University of Jaffna.**"
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.30 hrs on the **21st August 2013 for the works No 1 & 2** and at Ariviyalnagar, Kilinochchi at 10.30 hrs on the **19th August 2013 for the work No 3.**

***Vice- Chancellor,***
Chairperson, Procurement Committee,
University of Jaffna,
Thirunelvely, Jaffna.
07.08.2013

(சி/4247)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



ஆன்மீகம் 80

சித்தர் பெருமான் குரலை இனிமை யாக்கி அதே நேரம் கண்டிப்பதை போல நடந்தது நடந்திடுச்சி, அதையே நினைத்து உருகாதே! இங்கே மனிதன் கண்ணுக்குத் தெரியாமல் பல பெரியவர்கள் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இதைப் போன்ற பொருட்களைக் (இரசமணி) கண்டால் விடமாட்டார்கள். தட்டி பறித்து விடுவார்கள். நாம் தான் எச்சரிக்கையாக இருக்கணும்! இவர்களுக்கு இது வேலை! உன் கையிலிருந்து அவர்கள் யாரோ அந்த மணியை பறித்துச்சென்று விட்டார்கள். போகட்டும் விடு! இதைவிட சக்தி வாய்ந்த பொருளை உனக்கு தருகிறேன் என்று கூறி ஒரு புது இரசமணியைக் கொடுத்து இதையாவது பத்திரமாய வைத்துக் கொள் என்றார்கள். பக்தியோடு அப்பொருளை பெற்றுக்கொண்டேன். நன்றி உணர்வால் மீண்டும் என் கண்களில் கண்ணீர் நிறைந்தது. சித்தர் பெருமானின் சித்தத்தில் இரண்டறக்கலந்து நிற்கும் கருணை மனம் கண்டு, கருணைக் கடலே என்று மனதுக்குள் வணங்கினேன்.

இம்மலையில் வசிக்கும் சில மலைவாசிகளை சித்தர் அவர்கள் மலைக்கு வரும்போது, தம்முடன் கூட அழைத்துச் செல்வது வழக்கம். மலையில் பழக்கப்பட்ட அவர்களிடம் மூலிகையின் பெயர்களை கூறினாலே, அது விளைந்திருக்கும் இடத்திற்கு அழைத்துப்போய் விடுவார்கள். சில அரிய மூலிகைகளைத் தேடும்போது அலைச்சலை தவிர்க்க இவர்களுக்கு கூலிகொடுத்து அழைத்துச் செல்வோம்! அப்படிப்பட்ட சிலர் என்னிடம் பேசும்போது சித்தரைப் பற்றி பக்தியுடன் பிரமிப்புடன் பேசுவார்கள்! மூலிகைதேடி எவ்வளவோ பேர்கள் வந்திருக்கின்றனர். ஆனால், சாமியைப்போல் ஆற்றலும், மூலிகைகள் பற்றிய அறிவும் வேறு எவரிடமும் நாங்கள் கண்டதில்லை, என்று கூறுவார்கள்.

இந்த முறை செல்லும் போது, வழக்கமான ஆட்கள் கிடைக்காததால், புதிதாக வந்த ஒருவரை பேசி அழைத்துச் சென்றோம். அவனைப் பார்த்த சாமிகள் என்னய்யா! உங்களுக்கு மூலிகைகளைப் பற்றி நன்றாகத் தெரியுமா? என்று கேட்க, அவன் சாமியை ஏற இறங்க பார்த்தவராய் என்ன சாமி இப்படி கேட்டுட்டீங்க! மூலிகைகளைத் தேடி வந்தவங் வாங்க! வீட்டுத்தோட்டத்திலுள்ள செடிகளை மாதிரி இந்த மலையிலே இருக்கிற எல்லா மூலிகைகளையும் கண்டு வைக்கிறவன் நான். எனக் கர்வம் தொனிக்க பேசினான். இதைக்கேட்ட சாமியின் முகத்தில் ஒரு சிறு புன்னகை தோன்றி மறைந்தது. அப்படியா? உன்னை பத்தி தெரியாம கேட்டுட்டேன்! இது தானே நாம முதல்ல சந்திக்கிறது- என்றவர் சற்று நிறுத்தி ஆமா நான் இந்த மலைக்கு அடிக்கடி வந்திருக்கேன். உன்னை நான் பார்த்ததேயில்லை! என்றார். அதற்கு , அவன் என்னைப் பிடிக்கறது கஷ்டங்க! ஒருநாள் கூட நான் ஒய்ஞ்சு- உட்கார்ந்தது இல்லை - யாராவது தேடிவந்து கூட்டிக் கிட்டுப் போயிடுவாங்க! நான் கிடைச்சதே உங்க அதிர்ஷ்டம் என்று தான் சொல்லனும் - என்றார். இது கேட்ட நாங்கள் அம்மனிதனை அதிசய மனிதனாகக் கண்டோம்.



கொல்லிமலை ஆகாச அருவியின் ஓரம் பாறையில் அன்னதானம்

சித்தர் அருகிலிருந்த ஒருமரத்தைக் காட்டி அது என்ன மரம் என்று கேட்க அவன் அது ஜோதி விருட்சம் என்றான். இது ஜோதி விருட்சம் அல்ல. ஜோதிவிருட்சத்தின் இலை வட்டமாகவும்காய் கொன்றைக்காய் போலிருக்குமே என்றார். சாமி முகத்தில் மீண்டும் மின்னலென முறுவல் தோன்றி மறைந்தது. அவர் அவர்கள் செய்யும் பாவத்தில் பெரும் பங்கு உனக்குத்தான் ஆண்டவன் தண்டிச்சிடுவான். இனிமேலாவது தவறான ஆசாமிக்கு இப்படி தவறான மூலிகை களைக் காட்டாதே நீ புறப்படு என்று கூற அந்த ஆள் விட்டால் போதும் என்பது போல் மலைக்காட்டுக்குள்புகுந்து மறைந்தான். அவன் போவதை பார்க்கும் குரலில் "இப்படித்தான் சில ஆட்கள் சித்தர்களின், அகஷ்தியர் போன்ற தெய்வீக புருஷர்கள் எழுதி அருளிய வைத்திய சாஷ்திர நூல்களை புரிந்தும் புரியாமலும் ஒரு முடிவுக்கு வந்து கோரக்கரின் மலைவாகடம் என்ற நூலை படிச்சிட்டு மூலிகை தேடி மலைக்கு வந்து விடுகிறார்கள்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்!

ஏழு பெண்களின் வாழ்க்கைக்கதையை கொண்டு அற்பக்கண்ணோட்டங்களைத்தகர்ந்து எறிகின்றது. என்ற இந்நூலின் தெலுங்கானாப்போரில் தீரமிகு பெண்களின் அறிமுக நூல் இங்கே:-



ஏழு பெண்களின் வாழ்க்கைக் கதையை கொண்டு அற்பக்கண்ணோட்டங்களைத் தகர்த்து எறிகின்றது தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்.

பெண் என்றால்? வம்பு பேசுவாள், வாயாடுவாள், ஜாடை பேசுவாள், இல்லையென்றால் மாமியார், மருமகள், நாத்தனார், கணவன் என அணி பிரித்துக் கொண்டு தங்களுக்குள்ளாகவே ஒரு "தர்மயுத்தத்தை நடத்திப் போராடுவாள்" இன்னும் புத்திசாலிப் பெண்ணோ மத்தியானமகளிர் மட்டும் தொடரில் வந்து எம்பிராய்டு பின்னிக் காட்டுவாள். எப்படி வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்கலாம் என்று விபரம் சொல்வாள்... இப்படித்தான் தொலைக்காட்சிகளும், சினிமாக்களும் பெண்களை தமது வர்த்தக வட்டத்துக்குள் சுழல விட்டுக் காட்டுகின்றன.

ஆனால், தெலுங்கானாவின் உழைக்கும் வர்க்கத்துப் பெண்களோ "எமது பேரழகும் ஆளுமையும் சமூக உணர்வில் வெளிப்படுகின்றது" என்று இரத்தசாட்சியாக நம்முன் வந்து உரக்கப் பேசுகிறார்கள். அவ்வாறு நடைமுறையில் வாழ்ந்த தெலுங்கானா பகுதிப் பெண்களின் வகை மாதிரியாக ஏழு பெண்களின்வாழ்க்கைக் கதையை நம்முன் நடத்திக் காட்டி, நமது வாழ்வின் அற்பக்கண்ணோட்டங்களைத் தகர் த்து எறிகின் றது ஒரு புத்தகம். அந்தப் புத்தகத்தின் பெயர் "தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்" அளப்பரிய வீரமும், தியாகமும் ததும்பி நிற்கும் தெலுங்கானாவில் ஒன்றுபட்ட கமயூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மக்கள் அணிதிரண்டனர். நிலப்பிரபுக்களின் கேட்பாரற்ற கொடிய சுரண்டல், பொலிஸ், இராணுவத்தின் அடக்குமுறைகள் படுகொலைகள் இவைகளைக் கண்டு பயப்படாமல், பணியாமல் நிலத்துக்காகவும், தங்கள் விடுதலைக்காகவும், அதிகாரத்திற்காகவும் ஆர்த்தெழுந்தது தெலுங்கானா. திருப்பித் தாக்கி திமிறி எழுந்த தெலுங்கானாவின் பெண்களில் ஒருவர்தான் இந்த நூலில் முதலில் நமக்கு அறிமுகமாகும் பாண்டி ராஜக்கா. போராளிகளுக்கு சோளக்கதிரை சுமந்து சென்ற போது வழியிலேயே பொலிசும், இராணுவமும் நிலப்பிரபுவின் ஆட்களோடு சேர்ந்து கொண்டு அவளைப்பிடித்து சித்திரவதை செய்கின்றார்கள். உதைத்தால் போராட்ட விபரங்களையும் கட்சி இரகசியங்களையும் காட்டிக்கொடுத்து விடுவாள் என்பது அவர்களது கணக்கு.

மேலும் பெண்தானே! இரகசியம் காக்க மாட்டாள். பாலியல் பலாத்காரம் வரை சென்றால் பயந்து விடயத்தை வெளியிடுவாள் என்று அந்தக் கயவர்கள் கடைசி எல்லை வரைக்கும் போனாலும் அவள் உடம்பிலிருந்து இரத்தத்தைதான் கறக்க முடிந்ததே ஒழிய மக்கள் விடுதலைக்காகப் போராடும் கட்சியின் திட்டங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பெற முடியவில்லை.

ஆணாதிக்கத் திமிரோடு அந்த அயோக்கியர்கள் அந்தப் பெண்ணின் மேல், உடல்வதையில் மட்டுமல்ல, சொல் வதையிலும் இறங்கினார்கள். நிலப் பிரபுத்துவத்தின் எந்த அடக்கு முறைக்கும் பணியவில்லை பாண்டி ராஜக்கா. பொதுவாழ்க்கைக்கு வந்து கட்சி, அரசியல் என்று செயல்படப்போனால் ஒரு பெண்ணின் ஒழுக்கத்துக்கே கேடு வந்து சேரும் என்று எக்கச்சக்கமாக யோசிக்கின்ற நடுத்தரவர்க்க மனநிலையாளர்கள் மத்தியில் பெண்டல பாடு என்ற சாதாரண கிராமத்துப் பெண்ணான ராஜக்கா எதிரிகளின் வதைமுகாமில் நேருக்குநேர் வாதம் செய்யும் துணிச்சலை நீங்களே பாருங்கள்.

"தகாதவார்த்தைகளால் இனியாவது சொல்றியா? என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் அதட்டினான்.

என்ன சொல்லச்சொல்றீங்க? என்று கேட்டாள் அவள்.



உன்னோட ஆம்படயான் சங்கதிதான். என்று தாஸ் என்கிற ஜமீன்தார் எகத்தாளமாக கூறினான்.

அவ சும்மாவே சொல்லுவாளா சார்? போட்டு நொறுக்குங்க! பாருங்களேன் எவ்வளவு சதை போடிருக்கா? இவளுக்குப் போராட்டக் குழுவில் பத்துப்பேர் ..! என்று கூறி, ஜமீன்தார் தூண்டி விட்டான்.

நடத்தையைக் கேள்விக்குள்ளாக்கினால் ஓவென்று அழுது தங்கள் வழிக்கு வந்து விடுவாள் என்ற அவர்களின் சம்பிரதாயமான கலாச்சாரத்தின் முகத்தில் காறித்துப்பும்படி முன்னை விடத் தீவிரமாகப் பேசினாள்.

"ஒழுக்கமே இல்லாத நீ என்னை அவதூறு பேசிறியா? நீ பிழைக்கிற பிழைப்பு ஒழுக்கங்கெட்ட பிழைப்பு! திங்கிறதெல்லாம் இரத்தச்சோறு! உன்னையும் உன் குடும்பத்தையும் யாருக்குத்தான் தெரியாது? அப்படிப் பட்ட நீ, என்னைப்பத்தி அவதூறு பேசிறியா?

ஒரு பெண் தனது குடும்ப நலனுக்காக வாழ்வதையும், கணவனது விருப்பப்படி இருப்பதே குடும்ப இலட்சணம் என்று அவன் விருப்பப் படி...... வீட்டுக்குத் தூக்கிச் சென்றதை இலக்கியமாகப் புராணமாகப் பேசும் இந்த நாட்டில் தான் பாலியல்வன் முறைக்கு உள்ளாகும்போது தனது சமூகத்தின் மக்களுக்காக அனைத்து இன்னல்களையும் எதிர்கொண்டு சமூக உணர்வுடன் ஒரு பெண்ணால் போராட முடியும் என்பதை நடைமுறை சாத்தியமாக்கிக் காட்டுகிறாள் ராஜக்கா. அது மட்டுமல்ல... தொடரும்

இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




539

# தூங்காதப் பிசாசு



சிவபுரி கிராமத்தின் எல்லையில் ஓர் அடர்ந்த காடு இருந்தது. அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தில் பல மோகினிப்பிசாசுகள் வசித்து வந்தன. ஒருநாள், அவர்களுடைய அணியில் புதிதாக ஒரு மோகினிப் பிசாசு வந்து சேர்ந்தது. அதன் பெயர் கிசுகிசு. அங்கு வந்து சேர்ந்த நாள் முதல், கிசுகிசுவிற்குத் தூக்கமே வரவில்லை. மற்ற மேகினிப்பிசாசுகள் இரவு முழுவதும் கும்மாளம் மடித்துவிட்டுப் பகற்பொழுதில் உறங்கிவிடும்.

ஒருநாள் இதைத்தன்னுடைய தோழியான கிங்கிணிப்பிசாசிடம் கூறியது. "இதற்கெல்லாம் வருத்தப்படாதே! ஒரு காரியம் செய்! இரவு முழுவதும் ஆலமரக்கிளையிலிருந்து தலைகீழாய்த் தொங்கு! பகலில் தூக்கம் வரும்!" என்றது. அப்படி ஒருநாள் செய்து பார்த்தும், கிசுகிசுவிற்குத்தூக்கம் வரவில்லை.

மறுநாள் கிங்கிணி, "சிவபுரியில் ரங்காச்சாரி என்று ஒரு வைத்தியர் இருக்கிறார். அவரிடம் தூக்க மருந்து

## அம்புலிமாமா கதைகள்

கேள்! அதை விழுங்கினால், கட்டாயம் உறக்கம் வரும்!" என்றது.

ஒரு விவசாயியின் உருவம் எடுத்துக் கொண்டு, கிசுகிசு ரங்காச்சாரியை அணுகியது. கிசுகிசுவின் வெளுத்த முகத்தையும் சிவந்த கண்களையும் கண்ட வைத்தியர், "ஏன் பேய் அடித்தது போல் இருக்கிறாய்! இரவில் சரியாகத் தூங்கவில்லையா?" எனக் கேட்டார்.

"ஆமாம்!" என்று கிசுகிசு சொல்ல, அவரும் தூக்கமருந்து தந்தார். ஆனால், அதை விழுங்கியும், கிசுகிசுவிற்கு தூக்கம் வரவில்லை.

மறுநாட் காலையில், எல்லா மோகினிப்பிசாசுகளும் தூங்கிக் கொண்டிருக்க, கிசுகிசு வழக்கப்படி தூக்கம் வராமல் தவித்தது. அப்போது, மரத்தடியில் ஒரு ஆள் கும்பகர்ணன் போல் தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு ஒரு கல்லை அவர் மீது எறிய, அவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

கிசுகிசுவைக் கண்டு முதலில் பயந்தாலும், பிறகு தைரியத்தைவரவழைத்துக்கொண்டு, "நீ யாரம்மா? சிவனேயென்று தூங்கிக்கொண்டிருந்த என்னை ஏன் எழுப்பினாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நான் ஒரு பிசாசு! என் பெயர் கிசுகிசு! எனக்குத் தூக்கம் என்பதே இல்லாமல் போய்விட்டது. இதற்கு



ஏதேனும் தீர்வு கூறு" என்றது கிசுகிசு.

"அடடா! அப்படியா? என்ற அந்த ஆள், என் பெயர் கன்னையன். உன்னைப் போல் நானும் தூக்கம் வராமல்



கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தேன். ஒரு யோகி எனக்கு அருமையான யோசனை தந்தார். அதைப்பின்பற்றிய நான், இப்போது நன்றாகத் தூங்குகிறேன்!" என்றான்.

"அப்படியா? அதை எனக்கும் சிறிது சொல்லேன்!" என்று கிசுகிசு ஆவலுடன் கேட்டது. "பகல் முழுவதும் பாடிக்கொண்டேயிருக்கச் சொன்னார். அப்படிப் பாடினால் இரவில் நன்றாகத் தூக்கம் வரும் என்றார். அதன்படி, சிவபுரி கிராமத்தில் வசிக்கும் நான் பகல் முழுவதும் பாட ஆரம்பித்தேன். இரவில் நன்றாகத் தூக்கமும் வந்தது" என்றான் கன்னையன். "ஆகா! நானும் அப்படியே செய்யப்போகிறேன்!" என்ற கிசுகிசு இரவில் [illegible] பாட ஆரம்பித்தது. [illegible] கன்னையனுக்கு பிசாசின் பாட்டு பயங்கரத் தலைவலியை அளித்தது.

அவனால் இரவில் தூங்கவேமுடியவில்லை. அடடா! இந்தப் பிசாசு என்னைத் தூங்கவிடமாட்டேன் என்கிறதே! இதை நமது கிராமத்திற்கு விரட்டி விடலாம்! என்று எண்ணிய கன்னையன், மறுநாட் காலை கிசுகிசுவிடம்,"பெண்ணே நீ இந்தக் காட்டில் பாடுவதைவிட, இர வில் சிவபுரி கிராமத்திற்குச் சென்று பாடி னால், காலையில் உனக்கு மிக நன்றாகத்தூக்கம் வரும்!" என்றான்.

அப்படியே அன்று இரவு, கிசுகிசு கிராமத்திற்குச் சென்று இரவு முழுவதும் தனது கர்ணகொடூரமான குரலில் தொண்டைகிழிய உரக்கப் பாடியது. பயங்கரமான ஒலியைக் கேட்டு, இரவில் கிராமவாசிகள் வெளியே வந்து பார்த்தனர். ஒரு மோகினிப்பிசாசு வானவெளியில் பாடிக்கொண்டே பறப்பதைப்பார்த்து பயந்து தங்கள் வீடுகளுக்குள் திரும்பச்சென்று பேசாமல் படுத்துக் கொண்டனர்.

மறுநாள் கிசுகிசு தனது இருப்பிடமான ஆலமரத்திற்கு வந்து நிம்மதியாகத் தூங்கியது. அன்று மாலைநேரத்தில் தூக்கத்திலிருந்து எழுந்த பிறகு, கிசுகிசு கன்னையனை நோக்கி, "அற்புதம்! அபாரம்! நீ சொன்ன யோசனை பிரமாதமாகப் பலித்துவிட்டது. மிகவும் நன்றாக அனுபவித்துத்தூங்கினேன். இந்த அழகான யோசனையை எனக்கு சொன்னதற்காக உனக்கு நான் பெரிதும் நன்றி உடையவள் ஆவேன்!" என்று கூறிய கிசுகிசு, ஆலமரத்துப் பொந்து ஒன்றினுள் கையைவிட்டு ஒரு துணி மூட்டையை எடுத்து அவனிடம் நீட்டியவாறு, "இந்தா, நான் தரும் பரிசைப் பெற்றுக்கொள்!" என்றது.

அதைத்திறந்து பார்த்து கன்னையன் பெருவியப்பில் ஆழ்ந்தான். அதனுள் ஏராளமான தங்க நாணயங்களும், தங்க மாலைகளும் இருந்தன. கன்னையனும் அதை எடுத்துக்கொண்டு தனது கிராமத்தை நோக்கி மகிழ்ச்சியுடன் சென்றான். ஆனால், அன்றிரவு கிசுகிசுவிற்கு மீண்டும் கிராமத்திற்குச்சென்று பாடிக்கழிக்கத் தோன்றவில்லை. முதல்நாள் இரவு கிராமத்தில் பாடிக்கழிக்காததால் மறுநாள் பகல தூக்கம் வருமோ, வராதோ என்று பயந்த கிசுகிசுவிற்கு , எதிர்பாராதபடி நன்றாகத் தூக்கம் வந்தது.

ஆனால், பொற்காசும், நகைகளும் எடுத்துச்சென்ற கன்னையன் அன்றுமுதல் தன் தூக்கத்தை இழந்தான். இரவு நேரத்தில் கிராமத்தில் பாடித்திரிய கிசுகிசு வந்தால், அதையே நேரில் கேட்டுவிடலாம் என்று காத்திருந்தான். இரண்டு இரவுகளாக கிசுகிசு கிராமத்தை நோக்கி வராததன் மர்மத்தை அறிய, கன்னையன் மறுநாள் இரவில் காட்டிற்குச் சென்றான். அங்கு கிசுகிசு உற்சாகமாகத் தன் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான்.

"ஏன் உன்னை இரண்டு நாளாகப் பார்க்க முடியவில்லை?" என்று கேட்டதற்கு, கிசுகிசு, "இத்தனை நாட்களாக எனக்குத் தூக்கம் ஏன் வரவில்லை என்ற காரணத்தை நான் இப்போது கண்டு பிடித்துவிட்டேன். நான் உயிருடன் இருந்த போது, என் ஐஸ்வரியத்தை ஒரு மூட்டையாகக் கட்டி ஆலமரப்பொந்தில் பதுக்கி வைத்திருந்தேன். அகால மரணத்தின் விளைவாக நான் பிசாசாக மாறி இதே ஆலமரத்தை அடைந்தேன். பாவம் செய்து சம்பாதித்த அந்த ஐஸ்வர்யம் என்னிடம் இருந்தவரை எனக்குத் தூக்கம் வரவில்லை. ஆனால், அதை உன்னிடம் தந்த பிறகு எனக்கு இப்போது தூக்கம் நன்றாக வருகிறது" என்றது.

தனக்கு ஏன் இப்போது தூக்கம் வரவில்லை என்று கன்னையனுக்குப் புரிந்தது. ஆகையால் அவன் , பணம் முழுவதையும் தர்மகாரியங்களில் செலவிட்டான். அதன் பிறகு




கன்னையனுக்கும் நன்றாகத் தூக்கம் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

# இரசாயனவியல்

*(நேற்று முன்தினத் தொடர்ச்சி...)*

வினா 41 இலிருந்து 50 இற்கான அறிவுறுத்தல்கள்.

| தெரிவுகள் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமாக விளக்கத்தை தருவது |
| (2) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமாக விளக்கத்தை தராதது |
| (3) | உண்மை | பொய் |
| (4) | பொய் | உண்மை |
| (5) | பொய் | பொய் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 41 | சக்தி நெருக்கடியில் எதனோலை ஆனது ஒரு எரிபொருளாகப் பயன்படுத்த முடியும். | எதனோலின் தகனத்திற்கான நியம வெப்பவுள்ளுறையானது மிக உயர் பெறுமானமாகும். |
| 42 | எல்லா மூலகங்களும் இரசாயன ரீதியில் இணைக்கப்பட்ட நிலையிலேயே காணப்படும் | அணுக்கள் இணைந்து உருவாக்கப்படும் மூலககூறுகள் எப்போதும் உறுதியாகக் காணப்படும். |
| 43 | சினமனல்டிகைட் ஆனது சமபகுதியத்தைக் காட்டிக் கூடிய ஒரு அரோமற்றிக் சேர்வை ஆகும் | சினமல்டிகைட் $Br_2$ நீரை நிற நீக்கும் |
| 44 | சோல்வே முறையை ஒத்த முறையால் $K_2CO_3$ யினைத் தயாரிக்க முடியாது | $KHCO_3$ வெப்பப்பிரிகைக்குட்படாது |
| 45 | பரா நைத்ரோ பினோலின் அமில வன்மையானது ஏதோ நைத்ரோ பீனோலை விட அதிகமாகும் | பரா நைத்திரோ பீனோலானது வன்மையான அக ஐதரசன் பிணைப்பையுடையது |
| 46 | $NH_4^+$ இன் பிணைப்புக் கோணமானது $CH_4$ இன் பிணைப்புக் கோணத்திலும் சிறியதாகும். | $NH_4^+$ ஆனது அயன் ஆனால் $CH_4$ நான்முகி வடிவமுடையது |
| 47 | இருப்பானது நீர் அல்லது ஒட்சிசன் அற்ற நிலையில் துருப்பிடிக்காது | இரும்பு துருப்பிடித்தலானது ஒரு மின் இரசாயனச் செய்கை ஆகும். |
| 48 | பின்வரும் சமநிலைத் தொகுதியில் அமுக்கமானது தாக்கத்தை உண்டு பண்ணாது $C_{(s)} + H_2O_{(g)} \rightleftharpoons CO_{(g)} + H_{2(g)}$ | $C_{(s)} + H_2O_{(g)} \rightleftharpoons CO_{(g)} + H_{2(g)}$ எனும் தாக்கத்தின் Kp இனதும் Kc என்பவற்றின் எண் பெறுமானங்கள் சமனானவை |
| 49 | இரண்டு ஒன்றுடனொன்று கரையக் கூடிய திரவங்களின் கொதிநிலையானது அவ்அவ் தூய திரவங்களின் கொதிநிலைக்கிடைப்பட்ட பெறுமானமாக அமையும். | ஒரு கரைசலிற்கு மேலுள்ள ஆவி அமுக்கமானது வளிமண்டல அமுக்கத்திற்கு சமனாகும் போது கொதிக்கத் தொடங்கும் |
| 50 | எந்தவொரு பங்கீட்டுப் சேர்வையும் நீரில் கரையாது | எல்லா பங்கீட்டுச் சேர்வைகளும் முனைவற்றனவாகவும் பூச்சிய இரு முனைவுத் திருப்பு திறப் பெறுமானமுடையதாகக் காணப்படும். |

# இரசாயனவியல் - II

### பகுதி A

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01.

(a) தரப்பட்ட கட்டமைப்பு ஆவர்த்தன அட்டவணைக் கட்டமைப்பைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | H | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | C | N | O | | |
| 3 | | | | | | | | | | | | | Al | Si | | | | |
| 4 | | | | | | | Mn | | | | | | | | | | | |

i. மிக உயர் முதலாம் அயனாக்கற் சக்தியுடைய மூலகம் ..............................

ii. மிக குறைந்த் பங்கீட்டு ஆரையுடைய மூலகம் ..............................

iii. மிக உயர் மின் எதிர் தன்மையுள்ள மூலகம் ..............................

iv. மிக உயர் உருகு நிலையுடைய மூலகம் ..............................

v. அதி கூடிய இருக்கையுடைய பல்லுணுச் சாலகத்தைத் தோற்றுவிக்கும் மூலகம் ........

vi. +7 ஒட்சியேற்ற எண்ணுடைய சேர்வைகளை உருவாக்கும் மூலகம் ....................

vii. இரு பகுதியத்தைக் காட்டும் குளோரைட் இனைஉருவாக்கும் மூலகம் ..................

viii. நியம மின் அழுத்தப் பெறுமானம் (-) இனையுடைய மூலகம் ..............................

ix. லூயியின் அமிலமாகத் தொழிற்பக் கூடிய மூலகம் ..............................

x. வெவ்வேறு ஒட்சியேற்ற எண்களையுடைய அதிக் சேர்வைகளை உருவாக்கும் மூலகம்

(b) (i) $H_2CN_2$ இனை சூத்திரமாகவுடைய மூலக்கூறிற்கான பரிவுக்கட்டமைப்புக்களை பின்வரும் பெட்டிகளில் வரைக

A B C D

i. மேலுள்ளவற்றுள் மிக உறுதியான பரிவுக்கட்டமைக் கூறுக ............

(c) பின்வரும் சேர்வைகளை அமிலம், மூலம், நடுநிலை என வகைப்படுத்துக

i. MgO ....................  iv. $P_2O_5$ ..................

ii. CO ....................  v. MnO ..................

iii. $VO_3$ ..................

(d) பின்வரும் சேர்வைகளிற்கு நீருடனான தாக்கங்களிற்கான சமப்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக

i. $SiCl_4$ ..............................................................

ii. $PCl_5$ ..............................................................

iii. NaH ..............................................................

iv. $NO_2$ ..............................................................

02.

(a) M ஆனது தாண்டலற்றதொரு மூலகமாகும். அது மூவலுவளவுள்ள கற்றயனை உருவாக்கும் இது இலத்திரன் பற்றாக்குறையுள்ள சேர்வைகளை உருவாக்குவதுடன் உயர் மின் கடத்து திறனுடையது. இது தாக்குதிறன் கூடிய மூலகம் என்பதுடன் வளிமண்டல ஒட்சிசனுடன் சேர்ந்து உருவாக்கும் ஒட்சைட் படை காரணமாக அரிப்படைவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது.

i. உலோகம் M இனை அடையாளம் காண்க ..............................

ii. M இன் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக ..............................

iii. M இனது பொதுவான இயற்கை இருக்கை யாது ..............................

iv. M இன் இரு முக்கிய பயன்பாடுகளைக் கூறுக

v. M இன் உறுதியான ஒட்சைட்டுக்கான சூத்திரத்தை எழுதுக ......................

vi. M ஆனது ஐதான NaOH உடனோ ஐதான HCl உடனே தாக்கமடையுமா எனக் கூறுக. தாக்கமைடயும் எனின் அவற்றிற்கான சமப்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக

(i) ஐதான HCl உடன் ..............................

(ii) ஐதான NaOH உடன் ..............................

vii. M இன் மூவலுவளவுள்ள கற்றயனின் திரவக் கரைசலுக்கு ஐதான NaOH சேர்க்கப்படும் போதுள்ள அவதானங்கள் யாவை?

(b) 3ம் ஆவர்த்தன மூலகங்களின் உறுதியான ஐதரைட்டுக்களைப் பயன்படுத்திய பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக

அமில / கார இயல்பு – அமிலம் , காரம் , நடுநிலை, ஈரியல்பு

பிணைப்பின் தன்மை – அயன் , பங்கீடு, இடைநிலை

| | ஐதரைட்டின் சூத்திரம் | அமில / கார இயல்பு | பிணைப்பின் தன்மை |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |

(c) VSEPR கொள்கையைப் பயன்படுத்தி பின்வரும் மூலக்கூறுகள் / அயன்களின் வடிவங்களைத் தீர்மானிக்க

(i) $POCl_3$  (iii) $BF_3$

(ii) $NH_4^+$  (IV) $CO_3^{2-}$

(d) பின்வருவனவற்றை விபரிக்க

i. $H_2O$ இன் பிணைப்புக் கோணம் $H_2S$ இன் பிணைப்புக் கோணத்திலும் அதிகம் ஆகும்.

ii. $I_2$ ஆனது நீரில் கலரயாது ஆனால் $KI(aq)$ இல் நன்றாகக் கரையும்.

03.

(a) பின்வரும் இரசாயனத் தாக்கத்தினையும் தகவல்களையும் கருதுக

$$CaO_{(s)} + 3C_{(s)} \longrightarrow CaC_{2(s)} + CO_{(g)}$$

| இரசாயனத் தொகுதிகள் | $CaO_{(s)}$ | $C_{(s)}$ (கிரபைற்) | $CaC2_{(s)}$ | $Co_{(g)}$ |
|---|---|---|---|---|
| உருவாக்கத்திற்கான நியம வெப்பவுள்ளுறை $KJmol^{-1}$ | -635 | 0 | - 60 | - 110 |
| நியமஎந்திரப்பி $/JK^{-1}mol^{-1}$ | 40 | 6 | 70 | 197 |

(Ca = 40 , C = 12)

i. 25°C இல் மேற்படி தாக்கத்திற்றகான $\Delta H^{\theta}$ இனைக் கணிக்க

ii. 1kg $CaC_2$ இனை உற்பத்திக்கான செய்வதற்கான கொள்கை ரீதியான வெப்பப் பெறுமானத்தைக் கணிக்க

iii. மேற்படி தாக்கத்திற்கான $\Delta s^{\theta}$ இனைக் கணிக்க

iv. 25°C இல் மேற்படி தாக்கத்திற்கான சுயாதீன சக்தி மாற்றத்தைக் கணிக்க.

v. (iv) இலுள்ள விடையைப் பயன்படுத்தி 25°C இல் மேற்படி தாக்கத்திற்றகான சுயாதீனத் தன்மை பற்றி தர்க்கிக்க

vi. மேற்படி தாக்கம் சுயாதீனமற்றதெனில் அத்தாக்கம் சுயாதீனமாக நடைபெறுவதற்கான மிகக்குறைந்த வெப்பத்தைக் கணிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(b) ஒரு மின்னிரசாயனக் கலத்தின் பின்வரும் நியமக் குறியீட்டைக் கருதுக

$P_{t(s)} / I_{2(s)} / I^-(_{aq}, 1.0mol\ dm^{-3}) // Fe^{2+}{}_{(aq)}\ 1.0mol\ dm^{-3}\ (Fe^{3+}{}_{aq}, 1.0mol\ dm^{-3}) / pt_{(s)}$

$E^{\theta}_{I_{2}/I^-} = +0.54V$

$E^{\theta}_{Fe/Fe^{2+}} = 0.77V$

i. மேற்படி கலத்தின் e.m.f இனைக் கணிக்க
ii. அனோட்டை அடையாளம் காண்க
iii. அனோட் தாக்கத்தினை எழுதுக
iv. கதோட்டினை அடையாளம் காண்க
v. கதோட் தாக்கத்தினை எழுதுக
vi. கலத் தாக்கத்தினை எழுதுக
vii. ஒரு கலத்தின் e.m.f ஆனது பின்வரும் சந்தர்ப்பங்கள் எவ்வாறு மாறுபடுகிறதெனக் கூறுக.
1. $I^-{}_{(aq)}$ இன் செறிவை அதிகரிக்கும் போது
2. $Fe^{2+}{}_{(aq)}$ இன் செறிவை அதிகரிக்கும் போது
3. வெப்பநிலையை அதிகரிக்கும் போது

4. பவளப்பாறை அல்லது சுண்ணாம்புக்கல்லின் பிரதான கூறு $CaCO_{3(s)}$ ஆகும். இவை அமிலமொன்றுடன் தாக்கமடையும் போது வெப்பப்பிரிகையுற்று வாயு ஒன்று வெளிவிடப்படும்.

(a) பின்வரும் தாக்கத்தினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான சேர்வைகளின் இரசாயனச் சூத்திரங்களை தரப்பட்டுள்ள பெட்டிகளில் எழுதுக

i. [சுண்ணாம்புக்கல்] —Δ→ [ P ] + [ Q ]

ii. [ P ] + [ T ] —உயர் வெப்பநிலை / மின்வில்→ [ R ] [ S ]

(b) R இனையும் தரப்பட்ட இரசாயனப் பொருட்கள் தாக்கிகளை மாத்திரம் பயன்படுத்தி பின்வரும் மாற்றீட்டைச் செய்க.

- $CH_3CH_2Br$
- $H_2SO_4$
- $H_2O$
- $HgSO_4$
- Mg
- Na
- $LiAlH_4$
- $PBr_3$
- $NH_3$
- $CH_3OCH_3$
- ஐதான HCl

(c) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக. மாற்றீட்டிலுள்ள எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அதன்படி

| தாக்கம் | கருநாடி | தாக்கப்பொறி முறை |
|---|---|---|
| A ⟶ B | | |
| C ⟶ D | | |
| E ⟶ F | | |
| G ⟶ H | | |
| X ⟶ A | | |

(d) மேலுள்ள மாற்றீட்டில் கிடைக்கப்பெறும் விளைவு I இனைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. I இணை $NaOH_{(aq)}$ உடன் வெப்பமேற்றும் போது கிடைக்கும் விளைபொருட்கள் யாவை

ii. I இனை $LiAlH_4$ உடனும் $NaBH_4$ உடனும் தனித்தனியே தாக்கமடையவிடும் போது கிடைக்கப்பெறும் விளைவுகள் யாவை

1. $LiAlH_4$
2. $NaBH_4$

iii. C இனையும் F இனையும் தாக்கமடைய விடும் போது கிடைக்கும் விளைவு யாது?

## பகுதி B
### கட்டுரை வினாக்கள்
### இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

5.
a) 1.0mol $N_{2(g)}$ உம் 3.0 mol $PCl_{5(g)}$ உம் ஒரு மூடிய $100dm^3$ கனவளவுள்ள பாத்திரத்தில் 500K இல் பேணப்பட்டன அதன் போது பின்வரும் தாக்கமானது நடைபெற்றது.

$$PCl_{5(g)} \leftrightharpoons PCl_{3(g)} + Cl_{2(g)}$$

சமநிலைத் தொகுதியின் மொத்த அமுக்கம் $2.08 \times 10^5\ Nm^{-2}$ வாயுக்களின் இலட்சிய நடத்தைளைக் கருத்திற் கொண்டு பின்வருவனவற்றைக் கணிக்கை.

i. சமனிலைத் தொகுதியிலுள்ள வாயுக்களின் மொத்த அளவு (mol இல்)
ii. தனித்தனி வாயுக்களின் அளவு
iii. தனித்தனி வாயுக்களின் பகுதி அமுக்கங்கள்
iv. தொகுதியின் Kp பெறுமானம்
v. மேலே விடை (iv)இனைப்பயன்படுத்தி Kc பெறுமானத்தைக் காண்க
vi. மேலுள்ள தொகுதியானது $N_{2(g)}$ அற்ற நிலைமையில் காணப்படும் போது ஒவ்வொரு வாயுவின் தனித்தனி வாயுக்களின் பகுதி அமுக்கத்தினையும் தொகுதியின் மொத்த அமுக்கத்தினையும் கணிக்க.
vii. மேலுள்ள தொகுதி $N_{2(g)}$ அற்ற நிலையில் காணப்படும் Kp மாற்றத்தின்னை விளக்குக

b) நியம ஐதரசன் மின்வாய் ஆனது எளிய மின்கலம் ஒன்றின் மின்வாய் அழுத்தத்தை அளப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஐதரசன் மின்வாயை பயன்படுத்துவது நடைமுறையில் கடினமாகவுள்ளது.
எளிய மின்வாய் ஒன்றின் மின்வாய் அழுத்தத்தை அளப்பதற்கு பொதுவாக வெள்ளி – வெள்ளிக்குளோரைட் மின்வாய் பயன்படுத்தப்படுகின்றது.

(i) $Zn^{2+}$ கரைசலினுள் Zn உலோகத்தை தொடுகையில் வைத்திருக்கும் போது மின்னழுத்தம் எவ்வாறு உருவாகின்றது என விளக்குக.
(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட மின்வாய் அழுத்தத்தை ஏன் தனியாக அளக்க முடியாது எனக் குறிப்பிடுக.
(iii) ஐதரசன் மின்வாயின் நியம நிபந்தனைகளைக் குறிப்பிடுக
(iv) வெள்ளி – வெள்ளிக்குளோரைட் மின்வாயை எவ்வாறு தயாரிப்பீர் என சுருக்குமாகக் குறிப்பிடுக.
(v) வெள்ளி – வெள்ளிக்குளோரைட் மின்வாய் ஒன்றின் படத்தினை வரைவதுடன் அதன் எல்லாப் பகுதிகளையும் பெயரிடுக.
(vi) ஒப்பீட்டு மின்வாய் ஒன்றாக வெள்ளி – வெள்ளிகுளோரைட் மின்வாயை பயன்படுத்துவதில் உள்ள அனுகூலங்களைக் குறிப்பிடுக.
(vii) மாணவர் ஒருவரால் வெள்ளி – வெள்ளிக்குளோரைட்டைப் பயன்படுத்தி Zn மின்வாய் ஒன்றின் மின்னழுத்தம் அளக்கப்பட்டது. இதன் போது பெறப்பட்ட அழுத்தப் பெறுமானம் 0.91V

$E^{\theta}\ Zn^{2+}/Zn = -0.76V$ $E^{\theta}\ Ag/AgCl = +0.23V$

I. Zn மின்வாய் ஒன்றின் மின்வாய் அழுத்தத்தை துணிவதற்காக வெள்ளி – வெள்ளிக்குளோரைட் மின்வாயுடன் இணைக்கப்படும் போது உருவாகும் கலத்தின் நியமக்கலக் குறியீட்டை எழுதுக.
II. மின்னழுத்தமாக 0.91V எவ்வாறு பெறப்பட்டது என்பதை விளக்குக.

6. $Ba(IO_3)_{2(s)}$ ஆனது அரிதிற் கரையும் அயன் சேர்வை. இதன் கரைதிறன் விளைவுகளிற்கான விபரிப்பை எழுதுக

ii. $Ba(IO_3)_{2(s)}$ ஆனது $50cm^3$ தூய நீரில் கரைக்கும் போது கரையக் கூடிய அதி கூடிய $Ba(IO_3)_{2(s)}$ இன் திணிவு யாது

$$\{(BaIO_3)_2 = 487\}$$

iii. $Ba(IO_3)_{2(s)}$ ஆனது $0.02mol\ dm^{-3}$ $Ba(NO_3)_{2(aq)}$ இல் கரைக்கும் போதுள்ள மூலர் கரைதிறனைக் கணிக்க.

iv. $0.1mol\ dm^{-3}$ $NaIO_{3(aq)}$ இன் $100cm^3$ இனையும் $0.01\ mol\ dm^{-3}$ $Ba(NO_3)_{2(aq)}$ இன் $200cm^3$ இனையும் கலந்து பெறப்பட்ட கரைசலிலுள்ள $Ba(IO_3)_2$ இன் மூலர் கரைதிறனைக் காண்க.

(மிகுதி நாளை...)






இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையில் 74 ஆவது வருட நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் 18+ கணக்கை வைத்திருந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு தங்க நாணயப் பரிசு வழங்கப்படுவதையும் இரத்ததான நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசை அசைத்துப் பார்க்கும் -ஸ்நோவ்டென் !



"அமெரிக்காவின் கொடூர வேட்டையிலிருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ளும் மர்ம ஆயுதமாகத் தனது தகவல்களைப் பயன்படுத்துவதன் மூலம், தன்னை மௌனமாக்க முயலும் அமெரிக்காவின் அதிகாரத்துவ மையத்தையே மௌனமாக்கி விடுகிறார்" என ஏற்கனவே, ஸ்நோவ் டென்னைச் சந்தித்துப் பல விபரங்களை வெளிக்கொணர்ந்த கிளென் கிறீன் வால்ட் நிறுவனத்திலிருந்து ஜலீன் சலிவன் கூறியுள்ளார். அவரிடமிருக்கும் ஆவணங்களே அவருக்குரிய சிறந்த உயிர்க் காப்புறுதியாகும். "உண்மையில், ஸ்நோவ்டென்னிற்கு ஏதுவும் ஆகிவிக்கூடாது என்று அமெரிக்கா முழங்காலில் நின்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்" எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

ஸ்நோவ்டென், அமெரிக்காவின் இரு பெரும் உளவு நடவடிக்கைகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி உள்ளார். இதற்காக ஸ்நோவ்வெடன் மேல், மூன்று குற்றங்களைப் பதிவு செய்துள்ளனர். அதில் அமெரிக்காவிற்கு எதிரான உளவு பார்த்தல் என்பதும் ஒன்று. அதற்காக மட்டும் 30 வருடச் சிறைத் தண்டனை வழங்க முடியும். மூன்று குற்றங்களும் சேர்ந்தால் மரணதண்டனை என்பது நிச்சயமாகும்.

"ஸ்நோவ்டென் - எக்காரணம் கொண்டும் அமெரிக்கா தொடர்பான மேலதிக தகவல்களை வழங்கினால் உடனடியாக அவருக்கான தற்காலிகத் தஞ்சம் இரத்துச் செய்யப்படும்" என விளாடிமிர் புட்டின் தனது அமெரிக்க விசுவாசத்தை நிரூபித்துள்ளார். ஆனாலும், ரஷ்யாவின் வெளியுறவுத் திணைக்களம் எக்காரணம் கொண்டும் ஸ்நோவ்டென்னை அமெரிக்காவிடம் வழங்கமாட்டோம். இதுவரை காலமும் வரலாற்றில் அமெரிக்கா எம்மிடமோ நாம் அமெரிக்காவிடமோ யாரையும் ஒப்படைத்தது இல்லை எனக் கூறியுள்ளார்.

ஸ்நோவ்டென், ஒரு மரணப் பொதியினை உருவாக்கியுள்ளதாக, கிளென் கிறீன்வால்ட் தெரிவித்துள்ளார். ஸ்நோவ்டென் பல ஆவணங்களையும் அமெரிக்க அரசையே பெரும் சிக்கலுக்குள்ளாக்கும் தகவல்களையும் தனது கணினி நிபுணத்துவத்தின் மூலம் கிரைப்ரேஜ் முறையில் பாதுகாத்து வைத்திருப்பது தெரிந்ததே. அதேமுறையில், அமெரிக்கா தனது புலனாய்வாளர்கள் அல்லது உளவாளிகள் மூலம் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துமாயின் அத்தனை தகவல்களும் தன்னிச்சையாகவே மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் என ஸ்நோவ்டென் கூறியதாக கிளென் கிறீன்வால்ட் அமெரிக்க அரசாங்கத்திற்கு மேலும் ஒரு குண்டைத் தூக்கி வீசியுள்ளார்.

பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல், அமெரிக்கா தனது எதிரிகளை எப்படி அழிக்கும் என்பது தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் அதிகாரியும் கணினி நிபுணருமான ஸ்நோவ்டென்னிற்குத் தாராளமாகவே தெரியும். அதனாலேயே இந்த மரணப் பொதி தனது உயிருக்குப் பாதுகாப்பாக அமையும் என ஸ்நோவ்டென் இதனை உருவாக்கி இருக்கலாம்.

"ஒபாமாவின் நிர்வாகம் என் மீது மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க முயன்றால், அவர்கள் மக்கள் முன்னால் மக்களின் கடுமையான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையை உருவாக்குவேன்." என்று ஸ்நோவ்டென் ஒரு இணையக் கருத்தரங்கில் தெரிவித்துள்ளார். இதுவே, இவரின் மரணப் பொதியின் எச்சரிக்கை.

ஸ்நோவ்டென்னிடம் அமெரிக்க அரசையும் அதன் நிர்வாகத்தையும் ஒரு நிமிட நேரத்துக்குள் பாதிப்புக்குள்ளாக்கும் அளவிற்கு மிகவும் கனமான தகவல்கள் உள்ளன. இதுவரை வரலாற்றில் யாரிடமும் அமெரிக்க அரசை எச்சரிக்கக் கூடிய இந்த அளவு தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. என கிறீன் வால்ட் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் உளவுக் குற்றங்களில் சிக்கியிருப்போருக்கான [illegible] டும் வழங்கிறீ[illegible] மார்க் [illegible] ஸ்நோவ்டென்னும் கிறீன் லாண்டும் செய்வது கிரேமெயில் என்று கூறியுள்ளார். பிளெக்மெயில் எனும் ஒருவரது தகவலை வைத்து அவரை மிரட்டும் முறைமை போல் கிரேமெயில் என்பது உளவு பார்த்தாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் ஒருவர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அரசாங்கத்திற்கெதிரான தகவல்களை வெளியிட்டு விடுவேன் என மிரட்டித் தன் மீதான குற்றச்சாட்டை நீக்க மிரட்டுவதேயாகும்.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தகவலை வெளியிடும் போதும் அவருக்கான தண்டனையும் அதிகரித்தே செல்லும். ஜநோவ்டென் என்னை இன்னமும் தொடர்பு கொள்ளவில்லை. தொடர்பு கொண்டால் நான் "ஸ்நோவ் டென்னை வாயைப் பொத்திக் கொண்டு இருக்கும்படியே எச்சரிப்பேன். அத்தோடு ரஷ்ய உளவாளியான அன்னா செப்மான், திருமணக் கோரிக்கையை உடனடியாக ஏற்கும் படியும் கூறுவேன்" என்று கூறியுள்ளார். அன்னா செப் மான் 2010 ஆம் ஆண்டு மேலும் ஒன்பது உறங்கு நிலை உளவாளிகளுடன் அமெரிக்க அரசாங்கத்தினால் நாடுகடத்தப் பட்டவர். இவர் ஸ்நோவ்டென்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

கிறேமெயில் என்பது பொதுவான தற்பாதுகாப்பு இராஜதந்திரமாகும். முப்பத்து' மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதனை முறியிடிக்கும் வகையில் அமெரிக்கக் குற்றவியல் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஸ்நோவ்டென்னிடம் இருக்கும் ஆவணங்கள் மூலம் அவர், தனது குற்றப்பத்திரிகையை கனமற்றதாக்கித் தண்டனையைக் குறைக்கவோ அல்லது நிம்மதியாக உலகின் ஏதாவது ஒரு மூலையில் வாழ்வோ தான் முடியும் என மார்க்சையித் கூறியுள்ளார்.

ஆனாலும், அமெரிக்கப்புலனாய்வு நிறுவனங்கள் ஸ்நோவ்டென் ஏற்கனவே பல சேதங்களை தேசியப்பாதுகாப்பிற்குச் செய்து விட்டார். ஆனால், இதன் பாதிப்புக்களை அறிய நாளாகும் என்று தெரிவித்துள்ளார்கள். அவர்களிற்குத்தானே ஸ்நோவ்டென்னிடம் தாங்கள் எந்த அளவிற்குச் சிக்கி இருக்கிறோம் என்பது தெரியும். அமெரிக்கா தனது தகவல்கள் எதுவும் மக்கள் மயமாகி விடக்கூடாது என்பதில் இருக்கும் அக்கறையையே தனது ஆயுதமாக்கி ஸ்நோவ்டென் தன்னை நாடுகடத்தி அமெரிக்காவிடம் ஒப்படைத்ததிலி ருந்தும் அல்லது அமெரிக்க அரசின் உளவாளிகளால் கொல்லப்படாமல் இருக்கவும் தன் மீதான தண்டனை களிலிருந்தும் தப்பிக்கவும் வியூகம் அமைத்து இருப்பது தெரிகின்றது. இந்த வியூகத்திற்கான பலன் உடனடி யாகக் கிடைத்திருப்பது போல் தான் தெரிகின்றது.

அமெரிக்காவின் தலைமை அரசு வழக்கறிஞர் எரிக் ஹேல்டர் அவசர அவசரமாக "நாம் ஸ்நோவ்டென்னைக் கொல்லவோ சித்திரவதை செய்யவோ மாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் நீதி அமைச்சருக்கு எழுதி இருக்கும் கடிதத்தில் ஹோல்டர் இதனைத் தெரிவித்துள்ளார். "ஸநோவ்டென் மரண தண்டனைக்குரிய குற்றங்களையே செய்திருந்தாலும் அவருக்கு நாம் மரணதண்டனை வழங்கமாட்டோம் என்பதை உறுதிப் படுத்துகின்றேன். அத்தோடு சித்திரவதையும் செய்யமாட்டோம். சித்திரவதை அமெரிக்கச் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிகமோசமான சித்திரவதைக் கூடமான குவாண்டனாமோவையும் பிளாக் சைற்ஸ் எனப்படும் தேசிய பாதுகாப்புச் சபை மற்றும் சிமிகி வின் சித்திரவதைக் கூடங்களைப் பல நாடுகளிலும் வைத்திருக்கும் அமெரிக்கா சித்திரவதைச் சட்டமூலம் தடுத்திருப்பதாகக் கூறுவது பெரும் முரணாகவே தெரிகின்றது. அமெரிக்க அரசாங்கம் தடாலடியாக இந்த அறிவிப்பை விட்டிருப்பது ஸ்நோவ்டென்னின் ரஷ்யத் தற்காலிக தஞ்சக் கோரிக்கையின் அடிப்படையைத் தகர்க்கவே.

மரணதண்டனை விதிக்கப்படும் என்றால் மரணதண்டனைக்கு எதிரான நாடுகள் ஸ்நோவ்டென்னிற்குத் தஞ்சம் கொடுக்க முன்வரலாழ். மனித உரிமைகள் அமைப்புக்கள் மேலும் ஆதரவை வழங்க முன்வரலாம். இவற்றைத் தடுக்காவிட்டால் ஸ்நோவ்டென்னை அணுகுவது ஒபாமா நிர்வாகத்திற்கும் அதன் உளவாளிகளிற்கும் மேலும் முடியாத காரியமாகிவிடும். எப்படியாவது ரஷ்யாவிலிருந்து ஸ்நோவ்டென்னை வெளியேற்றினால் மட்டுமே தனது உளவாளிகள் மூலம் அமெரிக்க அரசு ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

என்னதான் அமெரிக்காவைத் தன் நண்பண் என்று புட்டின் கூறிக் கொண்டாலும், அமெரிக்க உளவாளிகளை உள்ளே அனுமதிக்கும் நிலையில் ரஷ்யாவும் அதன் உளவுத்துறையான " எஃவ்.எஸ் வீ.யும் இல்லை. எனவே, தனது சூழ்ச்சியை உலகின் மிகவும் ஜனநாயக நாடு போல் காட்டிக் கொண்டு ஆரம்பித்துள்ளது.

ஸ்நோவ்டென்னின் கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டதால் அவர், வேறு ஒரு இடமும் செல்ல முடியாது. விரும்பினால் அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல மட்டும் நாம் கடவுச் சீட்டு வழங்கத் தயாராக உள்ளோம் என ஹேல்டர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவை சூழ்ச்சிக்குள் வீழ்த்தி ஸ்நோவ்டென்னை எங்கும் அகலாதபடி சிக்கவைக்கும் அமெரிக்காவின் இந்தச் சூழ்ச்சி பலிக்குமா? அல்லது ஸ்நோவ்டென்னின் மரணப்பொதி இதனை முறியடிக்குமா?

சோழ ஹரிகாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்தபோது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

## வெலிவேரிய பிரச்சினை குறித்த ரணிலின் கேள்விக்கு நிமால் பதில்

(கொழும்பு)

**வெலிவேரிய சம்பவத்தின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது குறித்து பூரண விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளுமென சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சில தரப்பினர் பாதுகாப்பு தரப்பு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதோடு, கற்களாலும் பெற்றோல் குண்டுகளாலும் தாக்குதல் நடத்தியுள்ளனரென அவர் தெரிவித்தார்.

23/2 நிலையியற் கட்டளையின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எழுப்பிய கவனயீர்ப்பு பிரேரணைக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

ரதுபஸ்வலயிலுள்ள ஹேலீஸ் தொழிற்சாலையால் சூழல் மற்றும் நீர் மாசடைவதாக பிரதேச மக்கள், பிரதேச சபை உறுப்பினர் ஒருவரினூடாக கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி அமைச்சர்களான லசந்த அலகியவன்னவுக்கும் பண்டு பண்டார நாயக்கவுக்கும் அறிவித்திருந்தனர். இது தொடர்பில் சூழல் அதிகார சபை, கம்பஹா மாவட்ட செயலகம் அடங்கலான 6 நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டதோடு குடிநீர் பிரச்சினை குறித்து அறிக்கை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுப்பதாக சம்பந்தப்பட்ட மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. பகுப்பாய்வு விசாரணை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. அதுவரை மகர மற்றும் கம்பஹா பிரதேச சபைகளினூடாக மக்களுக்கு இலவசமாக நீர் விநியோகிக்கப்பட்டது.

நீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கையிலேயே வீதியை மறித்து ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுவதற்கான நீதிமன்ற உத்தரவை பெற பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், நீர்ப்பிரச்சினை தொடர்பிலான அறிக்கை கிடைத்த பின்னர் அது குறித்து விண்ணப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவித்தது.

குறித்த தொழிற்சாலை அதிகாரிகளுடன் ஜூலை 31இல் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் தொழிற்சாலையை தற்காலிகமாக மூட இணக்கம் காணப்பட்டது.

ஆனால், ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அன்றைய தினம் பாதுகாப்பு செயலாளர் சம்பந்தப்பட்ட தரப்பினருடனான பேச்சு நடத்தப்பட்டதோடு, ஆர்ப்பாட்டத்தைக் கைவிடவும் இங்கு இணக்கம் காணப்பட்டது. இந்த இணக்கப்பாடு குறித்து ஆர்ப் பாட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து ஒரு தரப்பினர் கலைந்து சென்றனர்.

ஆனால், அங்கிருந்த ஒரு குழுவினர் குழப்பம் ஏற்படுத்தியதோடு பாதுகாப்பு தரப்பு மீது பெற்றோல் குண்டுகளையும் கற்களையும் வீசி தாக்கினர்.

இவர்கள் பாதுகாப்பு தரப்பு மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. இந்தக் குழு பொதுச் சந்தையை உடைத்துள்ளதோடு, ஆட்டோ ஒன்றையும் எரித்துள்ளது. இவற்றைத் தடுத்த பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

அந்நிலையில் தமது பாதுகாபபிற்கெனவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பாதுகாப்பு தரப்பு நடவடிக்கை எடுத்தது. மேலும் அரசாங்கம் மக்களுடன் பொறுமையாக பேச்சு நடத்தியதோடு, நெகிழ்வுபோக்குடனும் செயற்பட்டது.

தேவாலயங்களில் தஞ்சம் புகுந்த மக்களை படையினர் சுட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தவறானது. சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தினூடாக விசாரணை நடைபெறுகிறது. பாதுகாப்பு தரப்பும் விசாரணை நடத்துகிறது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது குறிததும் விசாரிக் கப்படுகிறது.

எவரினதும் தூண்டுதலின் பேரில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டதா? என்பது குறித்தும் ஆராயப்படுகிறது. இந்தப் பிரச்சினை மூலம் அரசியல் இலாபம் பெற சிலர் முயல்கின்றனர். இச்சம்பவத்தில் சிலர் உயிரிழந்தமை குறித்தும் கவலை தெரிவக்கின்றோம் என்றார். (அ-2)

## வெலிவேரிய சம்பவம் குறித்து விசாரணை நடத்தவேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க சபை கடும் அதிர்ச்சியையும் கவலையையும் வெளியிட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த கம்பஹா சென் பீட்டர்ஸ் பாடசாலை மாணவனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க வேண்டும். நிராயுதபாணிகளான கிராமமக்கள் மீதான தாக்குதல்களை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

தேவாலயத்தில் அடைக்கலம் பெற்றுக்கொண்ட மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

ஆயுதங்களுடன் தேவாலய பூமிக்குள்பிரவேசித்தமையை மதத்தைஇழிவுபடுத்தும் செயலாகவே கருதவேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற நியாயமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என அவர் கோரியுள்ளார். (அ-2)

## எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 12 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 12 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 81 ஆக பதிவாகியிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் இந்த எண்ணிக்கை 91 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் எச்.ஐ.வி. நோய்த்தொற்று ஏற்பட்ட 4 ஆயிரத்து 500 பேர் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் இதுவரையில் எயிட்ஸ் நோயினால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். பாதுகாப்பற்ற பாலுறவினால் அதிகளவானவர்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)




- 1509 - கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசின் மன்னனாக முடிசூடினான். இவனது ஆட்சிக் காலமே இப்பேரரசின் மிக உயர்ந்த நிலையாகக் கருதப்படுகிறது.
- 1768 - ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை பிளைமவுத்தில் இருந்து ஆரம்பித்தான்.
- 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியின் இராணுவ ஆளுநர் அண்ட்ரூ ஜோன்சன் தனது தனிப்பட்ட அடிமைகளை விடுவித்தான். இந்நாள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டென்னசியின் ஆபிரிக்க அமெரிக்கர்களினால் விடுமுறை தினமாக கொண்டாடப்பட்டது.
- 1908 - வில்பர் ரைட் தனது முதலாவது வான்பயணத்தை பிரான்சில் "லெமான்ஸ்" என்ற இடத்தில் மேற்கொண்டார்.
- 1942 - இந்திய காங்கிரஸ் மும்பையில் கூட்டிய மாநாட்டில் ***வெள்ளையனே வெளியேறு*** என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1945 - ஐ.நா. சாசனம் ஐக்கிய அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐ.நாவில் இணைந்த மூன்றாவது நாடு இதுவாகும்.
- 1947 - பாகிஸ்தானின் தேசியக் கொடி அங்கீகாரம் பெற்றது.
- 1967 - ஆசியான் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1974 - வாட்டர்கேட் ஊழல்: ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் தனது பதவியைத் துறப்பதாக அறிவித்தார்.
- 1988 - மியன்மாரில் மக்களாட்சியை வலியுறுத்தி 8888 எழுச்சி நிகழ்ந்தது.
- 1989 - ஓர் இரகசிய இராணுவ விண்வெளித் திட்டத்தை முன்னெடுத்து நாசா கொலம்பியா விண்ணோடத்தை விண்ணுக்கு அனுப்பியது.
- 1990 - ஈராக் குவைத்தைக் கைப்பற்றி அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 2000 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்பினரின் எச். எல். ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் 136 ஆண்டுகளுக்குப் பின்னர் கடலினுள் இருந்து வெளியே எடுக்கப்பட்டது.
- 2007 - நாசா விண்வெளி ஆய்வு மையம் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து என்டெவர் விண்ணோடத்தை கிறிஸ்டினா மெக்காலீப் என்ற ஆசிரியர் உட்பட ஏழு விண்வெளி வீரர்களுடன் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு வெற்றிகரமாகச் செலுத்தியது.

பிறப்புக்கள்

- 1924 - அ. ந. கந்தசாமி, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (இ. 1968)
- 1941 - டிரோன் பெர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி (இ. 2008)
- 1948 - ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா, ரஷ்ய விண்வெளி வீராங்கனை
- 1981 - ரொஜர் ஃபெடரர், சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர்

### தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு



தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (Association of Southeast Asian Nations), அல்லது ஆசியான் (ASEAN) என்பது தென்கிழக்காசியாவின் 10 நாடுகளின் பொருளாதார மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பு ஆகும். இதனை 1967 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன.

பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தல், உறுப்பு நாடுகளிடையே சமூக மற்றும் பண்பாட்டு உறவுகளைப் பேணல், பிராந்தியத்தில் அமைதி பேணல் என்பன இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோள்களில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா - பாகிஸ்தான் எல்லை முறுகலை தணிக்க

# அமெரிக்காவில் பேச்சுவார்த்தை

## - காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்

இந்தியா - பாகிஸ்தா்ன் எல்லைப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தாக்குதலினால் இருநாட்டு உறவு நிலைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இரு நாட்டிற்கும் இடையிலான பிரச்சினைகளை போரினால் தீர்த்துக் கொள்ள முடியாது. கலந்தாலோசனை மற்றும் பேச்சுவார்த்தையால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பி.சி.சாக்கோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் கூட்டம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் விரைவில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் செல்லும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பாகிஸ்தானின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள நவாஸ் ஷெரீப்புடன் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் பகுதி எல்லைக் கோட்டின் அருகே அத்துமீறிய பாகிஸ்தான் இராணுவம் 5 இந்திய வீரர்களை சுட்டுக் கொன்றது.

இதனையடுத்து, நியூயார்க்கில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் பிரதமர் மன்மோகன் சிங் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. பாகிஸ்தானுக்கு இந்திய அரசு தக்க பதிலடி தர வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கூறி வருகின்றன.

இந்நிலையில், எதிர்க் கட்சிகளின் கருத்துக்கு பதில் கூறிய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பி.சி.சாக்கோ, "இரு நாட்டிற்கும் இடையிலான பிரச்சினைகளை போரினால் தீர்த்துக் கொள்ள முடியாது. கலந்தாலோசனை மற்றும் பேச்சுவார்த்தையால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதன் அடிப்படையில் நமது பிரதமர் நியூயோர்க்கில் பாகிஸ்தான் பிரதமர் நவா்ஸ் செரீப்பை சந்தித்து பேசுவார்" என்று தெரிவித்தார்.

## சிரிய போராளிகளிடம் வீழ்ந்தது இராணுவ விமானத் தளம்



சிரியாவில் ஜனாதிபதி பஷீர் அல் ஆசாத்துக்கு எதிராக அந்நாட்டின் போராளிகள் கடந்த இரண்டு வருடங்களாக போர் நடத்தி வருகின்றனர். இவர்களுக்குத் துணையாக ஈராக்கின் அல்கொய்தா இயக்கத்தினரும் போராடுகின்றனர்.

இந்த இரு பிரிவினரும் மற்றும் சில உள்ளூர் புரட்சி இயக்கங்களும் சேர்ந்து சிரியாவின் முக்கிய நகரமான அலெப்போவின் அருகே இயங்கிவந்த இராணுவ விமான தளத்தை கைப்பற்றியுள்ளதாக லண்டனிலிருந்து சிரியாவைக் கண்காணித்து வரும் மனித உரிமைக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்த விமானதள உத்தரவு மையத்தின் முன்னால் நின்றுகொண்டிருந்த கவச வாகனத்தின் முன் இரண்டு அயல்நாட்டு தற்கொலைப் படையினர் தங்களிடமிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். அதில் ஒருவர் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர்.

அவர்களின் பின்னால் வந்த புரட்சிப்படையினரின் குழு அங்கிருந்த ஏராளமான வீரர்களைக் கொன்று பீரங்கி வாகனங்களையும் அழித்துள்ளனர்.

சிரியாவின் முக்கிய நகரமாகவும், நிதி மையமாகவும் விளங்கும் அலெப்போ நகரத்தின் வடக்கே இந்த விமானதளம் அமைந்துள்ளது. கடந்த 40 வருடங்களாக நடைபெற்று வரும் ஜனாதிபதி ஆசாத்தின் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இந்த நகரத்தைத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர புரட்சியாளர்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர் என அரபு செய்தி பத்திரிகை நிறுவனம் கூறியுள்ளது.

## குண்டுவெடிப்பு



சிரியாவில் அல்-சோயஃப் சதுக்கம் அருகே நேற்றுமுன்தினம் மாலை காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 3 குழந்தைகள் உள்பட 18 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர்.

50இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை.

## பிரான்ஸில் நவீன சுற்றுலா விமானம் அறிமுகம்

பிரான்சில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஜிப்லின்(Zeppelin) சுற்றுலா விமானமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரான்சில் ஈபிள் டவரானது மூடப்பட்டுள்ள்தால் அங்கு வரும் சுற்றுலாப்பயணிகள் மிகுந்த ஏமாற்றுத்துடன் உள்ளனர். எனவே அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதமாக இந்த சுற்றுலா விமான சேவையானது தொடங்கப்பட்டுள்ளது.

இந்த விமானமானது 75 மீற்றர் நீளம் மற்றும் 70m/ph வேகத்தில், 300 மீற்றர் உயரத்தில் பறக்கிறது. மேலும் பிரிட்டிஷ் கேத்ரீன் வாரியத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த விமானத்தின் உள்ளே ஹீலியம் நிரப்பப்பட்டுள்ளது.

## உத்தரகாண்டில் வெள்ளத்தால் 6 ஆயிரம் பேர் உயிரிழப்பு

உத்தரகாண்ட்டில் கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என மக்களவையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் நிலவரம் குறித்து மக்களவையில் அறிக்கை தாக்கல் செய்த பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி,

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட பேரழிவில் 580 பேர் பலியானது உறுதி செய்யப்பட்டுள்ளது. 5,474 பேரை காணவில்லை. இவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. பாதிப்பு ஏற்பட்ட குறுகிய காலத்துக்குள் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து, விமானப் படையினர் 23 ஆயிரத்து 775 பேரையும், தரைப்படையினர் 38 ஆயிரத்து 750 பேரையும், இந்தோனேசிய திபெத் எல்லை பொலிசார் 33 ஆயிரம் பேரையும் மீட்டனர்.

உத்தரகாண்ட் வெள்ள நிலவரத்தை கடந்த மாதம் 19ஆம் திகதி பார்வையிட்ட பிரதமர் மன்மோகன் சிங் 1000 கோடி நிவாரண உதவி அறிவித்தார். அதில் ரூ400 கோடி உத்தரகாண்டுக்கு உடனடியாக வழங்கப்பட்டது. மீட்பு பணி மற்றும் மறுவாழ்வு பணிகளை வழிநடத்த பிர்தமர் தலைமையில் அமைச்சரவை குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்தோனி கூறினார். அப்போது மத்திய அரசு அறிவித்த உதவித் தொகை உத்தரகாண்ட் மாநிலத்துக்கு இன்னும் கிடைக்கவில்லை என பா.ஜ. எம்.பிக்கள் கோஷம் எழுப்பினர்.



சூடானில் கார்டோம் பகுதியில் வெள்ளத்தினால் வீடுகளையும், உடைமைகளையும் இழந்த மக்கள் பிரதான வீதிகளில் தமது இருப்பிடங்களை உருவாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பழைய மாணவர் கொடைகள் பாடசாலைகளை சரியான முறையில் வளர்க்கின்றனவா?

அறிமுகம்

பாடசாலைகள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை தொடர்வதன் மூலம் சமூகத்தின் செயற்படு ஆற்றல்களையும் சமூக நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்த முயல்கின்றன.

சமூகம் தனது முன்னேற்றத்தின் புலப்படும் குறிகாட்டிகளாக பாடசாலைகள், கோவில்கள், பொது விளையாட்டு மைதானங்கள், பொதுப் பூங்காக்கள், ஒன்று கூடும் மண்டபங்கள் போன்றவற்றை நிர்மாணித்தும் நவீனமயப்படுத்தியும் வருகின்றன.

இப்போதெல்லாம் திருமண மண்டபங்களும் மற்றொரு முன்னுரிமைக்குரிய சமூக அடையாளமாக மாறி வருகின்றன.

இவை எல்லாவற்றிலும் ஒப்பீட்டு ரீதியில் பாடசாலைகள்தான் புதிய தலைமுறையினரின் அறிவு, உணர்வு, சிந்தனை, ஒழுக்கம், நடத்தை என்பவற்றை மேம்படுத்தும் பேராற்றலுடன் செயற்படுவன என்பது முக்கியமானது.

இதனால் அரசாங்க பாடசாலைகளாக உள்ள போதிலும் பெற்றோரும் கற்று முன்னேறிய பழைய மாணவரும் சமுதாய வள்ளல்களும் பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்குவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்களின் உதவிகளும் கொடைகளும் பல பெரிய பாடசாலைகளில் குவிகின்றன. இந்த நன்கொடைகள் பல பாடசாலைகளின் பௌதிக வளத்தை பல நிலைகளில் விரிவுபடுத்தியுள்ளன. நவீனமயப்படுத்தியுள்ளன.

ஆனால், இவற்றுடன் சேர்ந்து புதிய நெருக்கடிகளையும் அதிபர்களுக்கு வழங்கி வருகின்றன. பல அதிபர்கள் பல புதிய எஜமானர்களின் கட்டளைச் சித்திரவதைகளுக்குள் அகப்பட்டு துன்பப்படுகிறார்கள்.

உதவி மற்றும் நன்கொடைகளுடன் பிணைக்கப்பட்ட பல மேலாதிக்க முகாமையாளர்களும் பாடசாலைகளுக்குள் நுழைந்து சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொள்கிறார்கள்.

இந்த புதிய போக்குகளினால் அதிபர்களின் வேலை அதிக மனஉளைச்சல் மிக்கதாகி வருகின்றது. அமைதியிழந்தவர்களாக-பலரின் சவுக்கடிகளுக்கும் உட்படுவோராக அதிபர்கள் மாறி வருகின்றனர்.

பாடசாலைகளின் அதிபர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய புதிய துன்பங்கள் பாடசாலைகளின் தொழிற்பாடுகளில் அதிக உள்முரண்பாடுகளையும் குழு உணர்வுகளையும் வளர்த்து வருகின்றன. பணம் செலவிடும் முறைகளும் மகிழ்ச்சி தருவனவாயில்லை. இவைபற்றி இன்று கலந்துரையாடுவோம்.

✦ வெளிநாட்டு நிதி உதவிகள்

வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் அங்கு அதிக சிரமப்பட்டு உழைக்கின்றனர். பழக்கமில்லாத காலநிலை, நிரந்தரமில்லாத வேலைமுறை, கடுமையான சட்ட நடைமுறை, வேலைக்காக பலநூறு மைல்கள் தினமும் பயணம் செய்யும் நடைமுறை, விரும்பிய போது விடுமுறை பெற முடியாத தொழில் வழங்குநரின் கட்டுப்பாடுகள் என்ற பல எல்லைக் கோடுகளுக்குள் துன்பப் பட்டே சம்பாதிக்கின்றனர். எனினும் தமது ஊரும் தாம் கற்ற பாடசாலையும் தமது சமு தாய மக்களும் முன்னேறுவதற்கு தமது பங்களிப்பை வழங்குகின்றனர். இந்த உதவிகள் பெரிய பாடசாலைகளுக்கு குவிவதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. பெரிய பாடசாலைகள் அதிக மாணவர்களை கொண்டிருப்பது இதற்கு உதவி செய்கின் றது. சிறிய பாடசாலைகளில் கற்பவர்களை விட பெரிய பாடசாலைகளில் கூடியளவான கல்வியை நீண்டகாலம் பெற்றதாலும் இப்பாடசாலைகளில் பற்றுதல் அதிகமாக உள்ளது.

இவ்வாறு பெரிய பாடசாலைகளுக்குரிய நன்கொடையை அதிகம் அனுப்பி வைக்கும் பழைய மாணவர்களும் பாடசாலை நலன் விரும்பிகளும் மிகவும் மரியாதைக்குரியவர்கள். சமூகம் அவர்களை உண்மையில் மதிக்கின்றது, கௌரவப்படுத்துகின்றது.

ஆனால், இந்த நிதிகளை உள்ளூரில் முகாமை செய்வதற்கு சில முகவர்களை நியமிக்கிறார்கள். அல்லது சிலர் கவனமாக உள் நுழைந்து முகவர்களாகி விடுகின்றனர். இவர்கள் அதிபர்களிலும் ஆசிரியர்களிலும் நேரடியாக அதிகாரக்கணைகளை வீசுகின்றனர். பல கண்காணிப்பு பொறிமுறைகள் மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது நெருக்கடிகளை பிரயோகிக்கின்றனர்.

அரச ஊழியர்களாக நியமனம் பெற்ற அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த புதிய வெளிநாட்டு உதவிகளுடன் பிணைக்கப்பட்ட எஜமானர்களின் தலையீடுகளினாலும் கட்டளைகளினாலும் அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். தொடர்ந்து மனவிரக்திக்கு உள்ளாகின்றனர். இவை பாடசாலைகளில் பல புதியநெருக்கடிகளைஉருவாக்கிவருகின்றன.

✦ திசைமாறிச் செல்லும் முதலீடுகள்

"கடந்தகால அனுபவங்களின்படி நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைகளுக்கான நிதிகளில் பெரும்பகுதி அதனை நிர்வகிக்கும் தேவைகளில் செலவிடப்பட்டனவேயன்றி உண்மையான தேவைக்குரியவர் (மாணவர், ஆசிரியர்)களின் தேவைகளில் செலவிடப்படவில்லை"

தேசிய கல்வி ஆணைக்குழு 2008: 247

மேற்கூறிய கூற்று பாடசாலைகளின் கல்வி கொள்கைகளை வடிவமைப்பதற்கு பொறுப்பான தேசிய கல்வி ஆணைக்குழுவின் புதிய கல்விச் சட்டத்திற்கான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது பிரதேச பாடசாலைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் நிதிகளில் பெரும்பாலானவற்றுக்கு இது பொருந்துகின்றது.




அனுப்பப்படும் நிதியை நிர்வகிப்பவர்கள்பாடசாலைக்கு வெளியே தமக்கு வசதியான நிர்வாககட்டமைப்பை உருவாக்கிக்கொள்கின்றனர்.

நிதி வழங்குபவர்களுக்கு ஒரு வகையான விளக்கத்தையும்பாடசாலை அதிபர்களுக்குஒரு வகையான விளக்கத்தையும் கொடுக்கின்றனர். இருவரும் இணைய முடியாதவாறு தம்மை தரகர்களாக நிலை நிறுத்திக் கொள்கின்றனர்.

கணிசமான நிதி, தேநீர் மற்றும் விருந்து பசாரங்களுக்கும் விளம்பரப் பிரசுரங்களுக்கும் செலவிடப்படுகின்றன. பரிசுச் சின்னங்கள் என்ற பெயரில் கணிசமான நன்கொடைப் பணம் செலவிடப்பட்டு விடுகின்றது.

பழைய மாணவர் அலுவலகங்கள், அலுவலக பொருட்கள், நிர்வாகம் என்பவற்றுக்கும் இந்த நன்கொடைகளில் கணிசமாக செலவிடப்படுகின்றன.

பெரிய பெரிய விளம்பரப் பலகைகள், அழகான விளம்பரப் பலகைகள் என்பன ஏராளமான நிதியை குடித்து விடுகின்றன. சிறிய பாடசாலைகள் அல்லது ஏனைய பாடசாலைகளை ஏளனம் செய்யும் வகையிலும் அவர்களைப் பொறாமைப்படச் செய்யும் அட்டகாசமான விளம்பரங்கள் செய்வதில் கணிசமான நன்கொடைகள் செலவிடப்படுகின்றன.

கற்கும் மாணவர்களின் தேவைகள் பற்றி கலந்துரையாடல்கள் மூலம் அறிவதில் எவருக்கும் நாட்டமில்லை. கற்பித்தல் செயல் முறைகளை முன்னேற்றுவதற்கான தேவைகள் பற்றி பல சுற்று கலந்துரையாடல்களை மாணவர்களுடன் நடத்தப்படும். ஆனால், அவ்வாறு எதுவும் நிகழ்வதில்லை. கற்பித்தல் பாடசாலையின் முதல் நிலைத் தேவை என்பதை உணர்ந்து ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கான கற்றல் துணைகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எதுவுமே இடம்பெறுவதில்லை.

ஆசிரியர்களது தேவைகளுக்கான அடிப்படை வசதிகள்கூட வழங்கப்படாமல் மிகப் பெரிய பெயர்ப்பலகைகளில் இலட்சக்கணக்கில் பணம் செலவிடப்படுகின்றது.

மாணவரது செயற்பாடுகள், சுயகற்றல், சுய கற்றலுக்கான ஊக்குவிப்புக்கள் தொடர்பான எவ்வித கரிசனைகளும் காணப்படுவதில்லை. பதிலாக ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் போல நிலமெங்கும் சீமெந்து முதலீடுகள் பரவிக்கிடக்கின்றன.

பாடசாலைகளில் புத்தாக்கத்திறன்களை வளர்ப்பதற்கும் குதூகலிக்கச் செய்வதற்குமான முனைப்புக்கள் ஏதுமில்லை. மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சி, இசைக் கருவிகளில் பயிற்சி , உள்ளக விளையாட்டுக்களில் பயிற்சி போன்றவற்றை ஆரம்பப் பாடசாலைகளிலும் இடைநிலைப் பாடசாலைகளிலும் முனைப்புடன்மேற்கொண்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு சிந்திக்க எவருக்கும் விருப்பமில்லை.

பாடசாலைகளை கொங்கிறீட் காடுகளாக மாற்றுவதற்கே வெளிநாட்டு பழைய மாணவர்களின் நிதி கொட்டப்படுவது வேதனை தரும் உண்மை நிகழ்வாகும். சுற்றுச்சூழல்

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

பற்றி அதிகம் பேசப்பட்டாலும் மாணவருக்கும் சூழலுக்கான தொடர்புகள் எதுவும் வளர்க்கப்படவேயில்லை.

சிறுவர்கள் நன்கு பேசவும் இனிமையான சுய சம்பாஷணைகளை மேற்கொள்ளவும் புதிய மொழிகளில் நாட்டம் கொள்ளவும் முயற்சிக்கலாம். இதற்கென ஒரு பகுதி நிதியை செலவிட்டால் என்ன? ஏன் இவர்களால் மாணவர்களை மையப்படுத்தி சிந்திக்க முடிவதில்லை. வெளிநாட்டு நிதியை இந்த குழந்தைகளுக்கு செலவிட்டால் என்ன?

✦ தேவைகளையும் மனிதர்களையும் கவனியுங்கள்

நிலக்கொள்வனவு, கட்டட நிர்மாணம், சாயம்பூசுதல், உருக்கு வளைவுகள், நிலத்தில் சீமெந்து வண்ணங்கள் போன்றவற்றுக்காகவே பெருமளவான நிதி செலவிடப்படுகின்றது.

இதிலும் பல அக்கறையீனங்கள் உள்ளன. வெளிநாட்டு மாணவர்களின் நிதியை பாடசாலைகளில் செலவிடும் போது நிதானமும் கூர்மையான சிந்தனையும் தேவை.

(I) பலமாடி வகுப்பறைகளைக் கட்டும் போது ஒரு கழிப்பறை வசதி வழங்கப்படவில்லை. நானூறு மாணவர்கள் உள்ள வகுப்பறைகளை ஏற்பாடு செய்யும்போது முந்நூறு மீற்றருக்கு அப்பால் உள்ள கழிப்பறைக்கு மாணவர்களும் பெண் ஆசிரியர்களும் அவசரமாக ஓடமுடியுமா?

(II) ஆயிரம் மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் பதினைந்து நிமிட இடைவேளை விடப்படுகின்றது. ஆனால், ஒரு பணியாளரும் நான்கு பேணிகளும் உள்ள "கன்ரீன்" எவ்வாறு வசதியளிக்க முடியும் என்பது ஆசிரியர்களும் ஆயிரம் மாணவர்களும் பயன்படுத்துவதற்கான நல்ல தேநீர்ச்சாலை எந்தவொரு பாடசாலையிலும் இல்லை.

இவைபற்றி கவனிக்காமல் மாணவரின் ஒழுங்கு எப்படி உயர்த்தப்படலாம்?

(III) ஆசிரியர்கள் தமது ஆவணங்களையும் நூல்களையும் பாதுகாக்க தனித் தனியான சிறு பெட்டகங்களை வழங்க வேண்டும். தமது கற்பித்தலுக்கான குறிப்புக்களை தயார் செய்யவும் பயிற்சிப்புத்தகங்களை திருத்துவதற்குமான கதிரை, மேசை கொண்ட ஒருசிறு மண்டபம் ஏற்பாடு செய்யலாம்.

தமது நாளாந்த உணவை காகங்கள் தூக்கிச் சென்றதால் மதிய உணவில்லாமல் கற்பித்துவிட்டு வீடு திரும்பிய பல தீவக ஆசிரியர்கள் உள்ளனர்.



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

ஆசிரியர்களுக்குரிய ஆகக் குறைந்த அடிப்படை வசதிகளை வழங்காமல் அவர்கள் உற்சாகமாக கற்பிப்பதில்லை என்று உரிமைக்குரல் உயர்த்துவதற்கு எவருக்கும் அதிகாரமில்லை. அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் களைப்புண்டு, அவர்களுக்கும் குடும்பங்கள் சார்ந்த மன உளைச்சல்கள் உள்ளன.

அவர்களது தேவைக்கான தனியான கழிப்பறைகள் உருவாக்கப்பட வேண்டும். பெண் ஆசிரியர்களுக்குரிய வசதிகள் வழங்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கும் வெளி நாட்டு மாணவர் நிதியை ஒதுக்கீடு செய்யுங்கள்.

வறிய பிள்ளைகள், மெல்லக் கற்கும் பிள்ளைகள், உடல், உள பாதிப்புக்குள்ளான பிள்ளைகள், தாய் அல்லது தந்தையுடன் மாத்திரம் வாழும் பிள்ளைகள் போன்றவற்றுக்கான தேவைகளை தனியாக பரிசீலனை செய்யுங்கள்.

இவற்றுக்கென வெளிநாட்டு பழைய மாணவர்களின் நிதியில் ஒரு பகுதியை ஒதுக்குங்கள்.

கல், மண், இரும்பு, வர்ணம் என்பவற்றில் மாத்திரம் வெளிநாட்டு நன்கொடைகளை கொட்டிவிடாதீர்கள்

கற்கும் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தையும் கற்கும் வசதி நிலையையும் கற்கும் திறன்களையும் அதிகரிப்பதற்கும் இத்தகைய நிதியை செலவிடுங்கள். சுயமாக கற்பதற்குரிய பயிற்சிக்கென பணம் செலவிடுங்கள்.*

ஆசிரியர்களின் எல்லாத் தேவைகளையும் பரிசீலனை செய்யுங்கள். அவற்றுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யுங்கள். ஆசிரியர்கள் போய்விடுவார்கள். ஆனால், வசதியான கட்டமைப்பு பள்ளிகளில் தொடர்ந்திருக்கும் என்பதை மறவாதீர்கள்.

வசதிகளை வழங்கிய பின் கற்பிப்பதை வலியுறுத்துங்கள். ஏனெனில் பொறுப்பும் அதிகாரமும் எப்போதும் ஒன்றிணைந்தவை தான்.

முடிவுரை

வெளிநாட்டு கொடைகளை ஓடுபாதையாக வைத்து இடைநிலை மாந்தர்கள் அதிபர்களையும் ஆசிரியர்களையும் துன்பப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கட்டங்களைவிட மனிதர்களில் (மாணவர், ஆசிரியர்) முதலீடு செய்யுங்கள். வெளிநாட்டு பழைய மாணவர் நிதியைக்கொண்டு கொங்கிறீட் காடுகளை உருவாக்காதீர்கள். ஆற்றலும் மகிழ்ச்சியும் சாதனைகளும் நிறைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்குங்கள். பாடசாலைகள் வெற்றி மையங்களாக்கி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் விபத்து பெண் காயம்

வவுனியா ஹொரவபொத்தான வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். வவுனியா நகரை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மீது ஆட்டோ மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-250)

## கப் வாகனம்-மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதி விபத்து

மோட்டார் சைக்கிளும் கப் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சிலாவத்தை சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

வீதி திருத்த வேலை இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை திருத்த வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்த கப் வாகனத்துடன் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

வீதி திருத்தவேலை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இடங்களில் வாகனத்தின் வேகத்தை குறைத்து தங்களின் பாதுகாப்பையும் எதிரில் வருபவர்களின் பாதுகாப்பையும் சாரதிகள் கருத்தில் கொள்ள வேண்டும் என் பது குறிப்பிடத்தக்கது. (ம)

## காயம் விளைவித்தவருக்கு ஒருவருட கடூழிய சிறை

முல்லைத்தீவு நாவற்காட்டுப் பகுதியில் கட்டுத்துவக்கினால் காலில் வெடிவைத்து கடும் காயம் விளைவித்தார் என குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நபருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் காயப்பட்டவருக்கு நட்டஈடாக 20 ஆயிரம் ரூபா பணம் செலுத்துமாறும் முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர் மன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இவ்வழக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதியன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ-ம)

# அடிப்படை வசதிகளின்றி தர்மபுரம் பொதுச்சந்தை

(புளியம்பொக்கணை)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பொதுச்சந்தை அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் கவலை தெரிவித்துள்ளனர்.**

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையில் இப் பொதுச்சந்தை அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதால் கொள்வனவு மற்றும் விற்பனை செயற்பாடுகளுக்கு பெரும் கஷ்டமாக உள்ளது.

கடந்த 1955 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்ட இப் பொதுச்சந்தை கட்டடங்கள் அனைத்தும் புனரமைக்கப்படாது இடிந்து விழக்கூடிய நில்லயில் உள்ளது.

குறிப்பாக இப்பொதுச் சந்தைக்கு சுற்றுவேலி அமைக்கப்படாமையால் கால்நடைகள் சந்தைக்குள் புகுந்து அசுத்தம் செய்கின்றன. அருகில் பாடசாலை உள்ளமையால் சந்தைக் குப்பைகள் பாடசாலைக்குள் பறந்து செல்கின்றன.

இப்பொதுச் சந்தையில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் சந்தைக்கு செல்வோர் அல்லலுறுகின்றனர்.

மேற்குறித்த சந்தையை புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம், கண்டாவளை, பெரியகுளம், தர்மபுரம் மேற்கு, தர்மபுரம் கிழக்கு, கட்டைக்காடு, கல்மடுநகர், உழவனூர், சுண்டிக்குளம் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இச்சந்தை சமதரையாக காணப்படாது பள்ளங்களாக உள்ளதால் மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய நிலையுள்ளது.

மலசலகூடம் பழுதடைந்த நிலையில் உள்ளமையால் அருகில் உள்ள பாடசாலை மலசலகூடத்தையே பயன்படுத்துகின்றனர். அத்துடன் மின்சார வசதி இன்மை பெரியதொரு குறைபாடாக காணப்படுகின்றது. இச்சந்தையில் 32 வியாபாரிக்ள் வியாபாரம் செய்கின்றனர்.

எனவே, இத்தனை குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து தருமாறு வியாபாரிகளும் நுகர்வோரும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)




## கள்விற்பனைநிலையத்தை வேறிடத்திற்கு மாற்றுக

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள பிரதான வீதியில் கள் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும் எனவும் அவ்விற்பனை நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக் கள் விற்பனை நில்யம் அமைக்கப்பட்டு வரும் இடத்தில் தர்மபுரம் வைத்தியசாலை, குடியிருப்புகள் என்பன உள்ளதால் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

எனவே, இக் கள் விற்பனை நிலையத்தை வேறிடத்தில் அமைத்து உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## இடையூறு விளைவித்த நபருக்கு அபராதம் விதிப்பு

புதுக்குடியிருப்பு பகுதியில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் செலுத்தத் தவறின் ஒருமாத கால சிறைத் தண்டனையும் வழங்கி முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபரை கைது செய்து பொலிஸார் மன்றில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் மது அருந்திவிட்டு விஷமிகள் அட்டகாசம் புரிவதாகவும்' அவ்வழியால் செல்கின்ற பாடசாலை மாணவிகள் அச்சுறுத்தப்படுவதாகவும் பொலிஸார் மன்றிற்கு தெரிவித்தனர். (அ-ம)

## விபத்தில் இருவர் காயம்

வவுனியா வைரவ புளியங்குள குளக்கட்டு வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பத்தவர்களை பின்னால் வேகமாக வந்த ஆட்டோ மோதிச் சென்றமையால் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் தடம் புரண்டு விழுந்து சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இப்பாதையில் பெரிய வாகனங்கள், வேகமாக செல்லும் ஆட்டோவினால்




விபத்துகள் ஏற்படுகின்றன என மக்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்துகள் ஏற்படும் பாதையாக காணப்படுவதனால் பெரிய வாகனங்கள் செல்வதற்கு மாற்று வழியை பாவிக்க உரியவர்களிடம் வலியுறுத்தியபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கபடவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர். (ம-250)

## ஒலிபெருக்கிகள் குறித்து புதிய கட்டுப்பாடு



வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வழிபாட்டு தலங்களில் ஒலி பெருக்கிகளின் ஓசைகள்வழிபாட்டு தலத்தின் ஆட்புல எல்லைக்குள் மாத்திரமே ஒலிக்க வேண்டும் என வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா அனைத்து வழிபாட்டு தலங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது,

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் அதீத ஓசையுடன் ஒலிக்க விடப்படும் ஒலிபெருக்கிகளால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, வழிபாட்டு தலங்களில் ஒலிக்க விடப்படும் ஒலிபெருக்கிகளின் ஓசையை உட்பிரகாரத்தினுள் மாத்திரம் ஒலிக்க விடுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ம-250)







**வவுனியா பிரதேச செயலக உளவளத்துணைப் பிரிவின் அனுசரணையுடன் சமூக சேவைகள் அமைச்சினால் வன்னி பிரதேச கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான உளவளத்துணை தொடர்பான அடிப்படை அறிவூட்டல் வதிவிட பயிற்சி பட்டறை, வவுனியா கிராம அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்றபோது சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் உளவள துணைப்பிரிவு இணைப்பாளர் எம்.எப்.எம்.அஸ்கர் ஆகியோர் உரையாற்றுவதையும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழை அமைச்சின் செயலாளர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.**

(படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வாழவேண்டும் என்று உனக்குத் தெரிந்தால் நீ பல காலம் வாழலாம்.
- லாங்ஃபெலோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வெளிநாட்டு உறவுகளுக்கு அறிவுரை கூறுங்கள்

புலம்பெயர் தமிழர்கள் என்று சொல்லிவிட்டு நாங்கள் ஒதுங்கி இருந்துவிட முடியாது. புலம்பெயர்ந்தவர்கள் வேறு யாரும் அல்லர். அவர்கள் எங்களுடைய பிள்ளைகள், சகோதரங்கள், உற்றவர்கள், உறவினர்கள். எனவே அவர்கள் தொடர்பில் நாம் விமர்சனம் செய்யும் அளவிற்கு நிலைமையை ஆக்கிக் கொள்வோமாயின் அஃது எங்களை நாங்களே வஞ்சிப்பதாக இருக்கும்.

எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக வெளிநாடு சென்றுள்ள எங்கள் உறவுகளின் கலாசாரத்திலும் அவர்களின் மொழி நிலையிலும் நாம் கவனம் செலுத்துவது கட்டாயமாகும்.

புலம்பெயர் தமிழர்கள் என்று பொதுப்படையில் நாம் பேசிக்கொண்டாலும் அவர்கள் சிந்திய வியர்வைதான் யுத்த அனர்த்ததிலும் எங்கள் இனத்தின் இருப்பைப் பாதுகாத்தது என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஆகவே புலம்பெயர்ந்தவர்கள் தாம் வாழ்கின்ற நாடுகளின் கலாசாரங்களுக்கு இயைபாகி இருப்பார்கள் என்று விட்டுவிடாமல் தாய் மண்ணிற்கு அவர்கள் வருகின்றபோது, சொந்தக் கலாசாரத்தை - பண்பாட்டைப் பேணுகின்ற நடைமுறையை கடைப்பிடிக்குமாறு அறிவுரை கூறுவது அவசியமானதாகும்.

எதிர்வரும் 12ஆம் திகதி நல்லூர்க் கந்தப்பெருமானின் பெருந்தெருவிழா ஆரம்பமாக இருக்கின்றது.

நல்லூர்க் கந்தப்பெருமானின் திருவிழாவில் பங்கேற்க வெளிநாட்டில் இருந்து நம்மவர்கள் இங்கு வருவார்கள் என்பது திண்ணம்.

இவ்வாறு வருகின்றவர்களில் இந்த மண்ணில் பிறக்காத எங்கள் உறவுப் பிள்ளைகளும் வருவார்கள். இவர்களின் ஆடைக்கலாசாரங்கள் எங்கள் பண்பாட்டிற்கு ஒருபோதும் ஒத்திசைய மாட்டாது.

அதிலும் குறிப்பாக நல்லூர்க் கந்தப்பெருமானின் திருவிழாவில் வெளிநாட்டு ஆடைக் கலாசாரங்கள் நல்லூரின் தெய்வீகச் சூழலுக்கும் புனிதத் தன்மைக்கும் ஏற்புடையதன்று. எனவே வெளிநாட்டு உடைக் கலாசாரங்களில் எங்கள் உறவுப்பிள்ளைகள் வருவதைத் தடுப்பதற்கு இங்கிருந்து நாம் அறிவுரை கூறியாகவேண்டும்.

அவர்கள் இங்கு வந்து தத்தம் நாடுகளின் கலாசாரப்போக்குகளுக்கு ஏற்றவாறான உடைகளில், நல்லூர் கந்தப்பெருமானின் திருவிழாவில் பங்கேற்கும்போது அதுபற்றி விமர்சிப்பது, குறைகூறுவது, வேடிக்கை பார்ப்பது என்பன அழகல்ல.

அவர்களும் எங்கள் உடன் பிறப்புக்கள். எனவே, எங்கள் மண்ணின் கலாசார - பண்பாட்டிற்கு ஏற்றவாறு நடந்துகொள்ள அவர்களை வழிப்படுத்துகின்ற தார்மீகக் கடமை நம் அனைவருக்கும் உண்டு.

இவற்றையெல்லாம் விடுத்து வெளிநாட்டு ஆடைக் கலாசாரத்தில் அவர்கள் நடமாட; நாங்கள் அதை வேடிக்கை பார்ப்பது அநாகரிகமானது.

இது எங்களுக்கும் அவர்களுக்குமான உறவு நிலையை பாதிக்கக் கூடியது.

ஆகையால், அதோ! வெளிநாட்டில் வாழ்கின்ற எங்கள் உறவுகள் எத்துணை அழகாக தமிழ்ப் பண்பாட்டை பேணுகிறார்கள் என்று பெருமைப் படும் அளவிற்கு நாம் உரிய ஆயத்தங்களைச் செய்யவேண்டும்.

# இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வெளியீட்டுக் குழுவினால் வெளியிடப்படும் எம் தாயே முத்துமாரி இசைப்பாடல் இறுவட்டின் முதற்பாகத்தின் வெளியீட்டு விழா நர்ளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு நிகழ்வில் விருந்தினர்களாக நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார், திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந. விஜயசுந்தரம், தொழிலதிபர் எஸ். பி. சாமி ஆகியோர் கலந்து கொள்ளவு ள்ளனர்.

இவ் இறுவெட்டு இசைப்பாடல்களுக்கான பாடல்வரிகளை கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ், இசையை முரளி ஆகியோர் வழங்கியுள்ளனர். (அ-5)

# ஸ்ரீ. சு. கட்சியின் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகமொன்று நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் அலுவலகம் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரட்னவினால் திறந்து வைக்கப் படவுள்ளதுடன், நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்துறையின் பிரதியமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு, பொதுமக்களிடம் குறை கேட்டு அறியும் நிகழ்வும் இடம்பெறும் என கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா. பொன்னம்பலம்அறிவித்துள்ளார்.(அ-9-19)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

07.08.2013க்கான வினாவும் விடையும்:-

**வினா:-** கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதன்மூலம் விளங்குவது என்ன?

**விடை:**
- கடமை எனும்போது அங்கு விருப்பு வெறுப்புக்கு இடமில்லை.
- கடமையை (செயல்) செய்கின்ற உரிமை (அதிகாரம்) எங்களிடமே இருக்கின்றது.
- பலனைத்தீர்மானிக்கும் அதிகாரம் கடவுளிடம் மட்டுமே உள்ளது. ஆகவே விருப்பு, வெறுப்புகள் இல்லாமல் பலனைப் பற்றிச் சிந்தியாது கடமைகளைச் செய்யும் போது வெற்றி நிச்சயம்

08.08.2013: **வினா:-** கடவுள் என்பவர் யார்?
விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்கு பற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# தே. போ. ஆணைக்குழு அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டச் செயலகத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகத்தை நேற்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் திறந்து வைத்துள்ளார்.

இத் திறப்பு விழா நிகழ்வில் பால கதிர்காம தேவஸ்தான சிவஸ்ரீ குமாரக் குருக்கள், அருட்தந்தை விஜின்றஸ், மௌலவி ஜே. ஏ. எம். அப்துல் அஸீஸ் நாகவிகாரை விகாராதிபதி விமலதேரர் ஆகிய சமய குருமார்கள் பலர் கலந்து கொண்டிருந்ததோடு தேசிய ஆணைக்குழுவின் பொறியியலாளர் ரஞ்சலி பெரேரா, தேசிய ஆணைக்குழுவின் வடமாகாண மாவட்ட அலுவலர் இராஜ இரணவீரகபரகம, தேசிய போக்குவரத்து ஆணைப்குழுவின் நிறைவேற்று அதிகாரி ஆலோக்கா கருணாரத்தின, யாழ் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ச. குகதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் ஆணைக்குழுவின் மூலம் மாவட்ட போக்குவரத்தை அபிவிருத்திசெய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-4)

# சக்திய தரிசனம்



தன்னை உணர்தல் என்னும் இலக்கிற்கு மிகச்சிறந்த உபகரணமாக புத்தி (அறிவு) பயன்படுத்தப்படுகிறது. அது மனிதனுள் இருக்கும் ஆன்மாவுக்கு மிகவும் அருகாமையில் உள்ளது. அது என்றும் மற்றவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டியபடி உள்ள பொழுது அது மாசடைந்து கம்பீரத்தின் சிறப்பை, அது ஒளிரக்கூடிய ஆத்மாவின் புகழைப் பிரதிபலிக்கும் வல்லமையை இழந்து விடுகிறது. மதிப்பையும் மரியாதையையும் நாம் கேட்டுப்பெறக் கூடாது. இறைவனிடம் மட்டுமே நாம் வெற்றி பெறுவதற்கான வழியைக் கெஞ்சிக் கேட்டுப் பெறலாம். தர்மத்தைக் காப்பவர்களை தர்மம் காக்கிறது. தர்மம் என்றால் குறிப்பிட்ட பொறுப்புக்கள். கடமைகள்,செயல்கள், வார்த்தைகள் மற்றும் நடத்தை மீதான ஒழுங்குமுறைகள். பசி ஒரு நோய். அந்த நோயைத் தீர்க்கும் மருந்து உணவு. இதுவே எளிய உண்மை. ஆனால் எவரும் இதனை உணர்ந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளவில்லை. மேலும் நோய்களை உருவாக்கும் ஆதாரமாக அதனை ஏற்படுத்தி உள்ளனர். இதன் காரணமாக அவர்கள் நாவின் விருப்பு வெறுப்புக்களை நிறைவு செய்வதும் புலன்களின் அடிமைகளாக நடந்து கொள்வதுமே ஆகும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோயிலுக்கு ஏன் செல்ல வேண்டும்?

பாலில் நெய் மறைந்திருப்பதை போல எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்திருக்கிறான். எங்கிருந்தாலும் அவனை வணங்கலாம் என்பது ஒரு கருத்தாக இருந்தாலும் கோயிலுக்குச் சென்று வழிபடும்போது பலன் இரட்டிப்பாக கிடைக்கும். ஒரு துணியை வெயிலில் காயப்போட்டால் உலர்ந்து போகும். அதே துணியை ஒரு லென்சின் கீழ் வைத்தால் கருகிவிடும். சூரியக் கதிர்கள் ஒன்றுதான். ஆனால் அதுகுவியும் போது சக்தி அதிகமாகிறது. வெளியிடங்களை விட கோயிலில் இறைவனை வழிபடும்போது மன ஒருமைப்பாடு அதிகரிக்கும்.இறைவழிபாட்டுக்கு முக்கிய தேவையே மன ஒருமைப்பாடுதான். அந்தச் சமயத்தில் செய்யும் பிரார்த்தனைக்கு சக்தி அதிகம். இது மட்டுமன்றி கோயில்களுக்கு மனச்சுத்தமுடைய அடியார்கள் பலர் முற்காலத்தில் வந்து சென்றுள்ளனர். நல்லவர்களின் பாதம்பட்ட இடத்தில் நின்றாலே நம் பாவங்கள் கருகிப்போகும். கோயிலில் உள்ள படிக்கட்டுக்கள்கூட அடியவர்களின் திருவுருவங்கள் என கூறப்படுவதுண்டு. எனவே வெளியிடத்தில் கடவுளை பிரார்த்தித்தாலும் வாரம் ஒருமுறையாவது கோயிலுக்குச் செல்வதை வழக்கமாக்கிக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்போர் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே, 16 வயது பூர்த்தியடைந்து இதுவரையிலும் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாதோர் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய அடையாள அட்டையைத் தவறவிட்ட நிலையில் அதனை மீண்டும் பெற்றுக் கொள்ளாதோர், தேசிய அடையாள அட்டை சேதமடைந்து, பழுதடைந்து அல்லது திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோர் இந்நடமாடும் சேவை மூலம் மேலும் பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அகதிகள் முகாமில் பிறந்த 16 வயதைப் பூர்த்தி செய்து முதற்தடவையாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், பிரஜாவுரிமைப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டிராதோர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆவ ணங்களை தயார்படுத்திக் கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கட்டாக்காலி மாடுகள் ஏலம் விடப்பட்டன

கரணவாய் வடக்குப் பிரதேசத்தில் கட்டாக் காலிக ளாகத் திரிந்த மாடுகள் நேற்று ஏலத்தில் விடப்பட்டுள்ளன. கரணவாய் வடக்கு விவசாய சம்மேளனத் திணைக்களத்தினரால் கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்பட்டு நேற்று முற்பகல் 11 மணிக்கு இப் பிரதேசத்திலுள்ள கக்கலாவத்தை வைரவர் ஆலயத்தில் வைத்து ஏலத்துக்கு விடப்பட்டன.

கட்டாக்காலிகளால் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் குறைப்பதற்காகவே இவ்வாறானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

## நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# தி.மு.க. போராட்டம்



(சென்னை)

✡ இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும்;

✡ இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது;

✡ தமிழகமீனவர்களைப்பாதுகாக்கவேண்டும்;

✡ இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் திடுக்க வேண்டும் என்ற 4 அம்ச டெசோ தீர்மானங்களை வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று இன்று முற்பகல் 10 மணிக்கு சென்னையில் முன்னெடுக்கப்படவுள்ளதாக டெசோ இயக்கத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு மேற்குறித்த விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தாது, நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருகிறது. இந்தப் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை உருக்குலைக்கும் நோக்கில் நடைபெறும் முயற்சிகள் குறித்து தான் அறிந்திருப்பதாகவும், இலங்கையில் தமிழ் மக்கள் மற்றும் இதர சமூகங்களைச் சேர்ந்த மக்கள் சமமாகவும் சுயமரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய முயற்சித்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இதுவரை எந்த ஒப்பந்தத்தையும் உறுதிமொழியையும் காப்பாற்றாத இலங்கை அரசு, தற்போது சிவ்சங்கர் மேனனிடம் இலங்கை ஜனாதிபதி தெரிவித்த உறுதிமொழியை எந்த அளவிற்குக் காப்பாற்றப் போகிறது என்பது தான் கேள்விக்குறியாகும். 13ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முழு அரசியல் தீர்வாக அமையாது என்பதும் இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுடைய கருத்தைக் கேட்டுத் தீர்வு காண்பதுதான், ஈழத் தமிழர்களின் நலனுக்கு உகந்த தீர்வாக இருக்கும் எந்தவித திருத்தங்களும் இல்லாது 1987 ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று டெசோ வலியுறுத்துகிறது.

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்றால், அடுத்த 2 ஆண்டுகளுக்கு இவ்வமைப்பின் அவைத் தலைவராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இருப்பார். 54 நாடுகளைக் கொண்ட அமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஒருவரை நீதி விசாரணைக்கு உட்படுத்துவது இக்கட்டாக ஆகிவிடக் கூடுமென்றும் வலிமையான கருத்துகள் முன் வைக்கப்பட்டு வருவதால், இலங்கையில் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தியா நட்பு நாடு என்று கூறிக் கொண்டு, அதில் கலந்து கொள்ளுமேயானால், அங்கே நடைபெற்ற இனப்படுகொலைகளை இந்தியா ஏற்றுக் கொள்வது போலாகி விடும்.

ஒவ்வொரு முறை மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம், தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் மத்திய அரசுக்கு வேண்டுகோள் அறிக்கைகளை வெளியிடுவதும், டெசோ சார்பில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும், தமிழக அரசின் சார்பில் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும் எந்த விளைவையும் இலங்கை அரசிடம் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

எனவே, மத்திய அரசு இனியாவது உறுதியானதொரு நடவடிக்கையை, தமிழகத்தின் மீனவர்கள் பிரச்சினை ஒட்டுமொத்தமாகத் தீருகின்ற வகையில் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. இலங்கையில் பன்னெடுங்காலமாகத் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் கொடுமை தொடர்வதைப் பற்றியும், தமிழர் பகுதிகளில் உள்ள ஊர்ப் பெயர்களை தமிழிலிருந்து சிங்களத்திற்கு மாற்றுவதைப் பற்றியும் டெசோ சுட்டிக்காட்டி இதனை உலக நாடுகள், மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாகத் தடுத்து நிறுத்திட ஆவன செய்திட வேண்டுமென்று, கூட்டம் வலியுறுத்துகிறது.

இதற்கிடையே செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையில் வடக்கு, வடமேற்கு, மத்திய மாகாணம் ஆகிய மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் முடிவடைந்து விட்டது. அதனையொட்டி உரையாற்றிய இலங்கை பிரதமர் டி.எம். ஜயரத்ன, மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி சம்பந்தமான உரிமைகள் பறிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

இதிலிருந்து இவருடைய பேச்சின் மூலம் 13ஆவது சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்து, வடக்கு மாகாணத்தில் உரிமைகள் ஏதும் தராத பொம்மை அரசை உருவாக்க எண்ணிடும் சூழ்ச்சிதான் தெரிகிறது.

இதனை எதிர்க்கும் வகையில் தான் இன்று டெசோ சார்பில் ஆர்ப்பாட்டம் அமையவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றித் தரவேண்டிய கடமை நமக்கு உள்ளது என கருணாநிதி அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தமிழக மீனவர்கள் 65 பேரையும் விடுவிக்கக்கோரி போராட்டம்

## 12 ஆயிரம் மீனவர்கள் களத்தில்

இலங்கை சிறையிலுள்ள 65 தமிழக மீனவர்களையும் அவர்களது 9 விசைப்படகுகளையும் விடுவிக்காவிடின் நாளை மறுதினம் சனிக்கிழமை காரைக்கால் மாவட்டங்களில் கறுப்புக்கொடி கட்டியும் பெண்களைக் கடற்கரையில் நிறுத்தியும் போராட்டம் நடத்துவது என நாகையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் காரைக்கால் மற்றும் நாகை மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 65 தமிழக மீனவர்களை மீட்க கோரி நாகை, காரைக்கால் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 26 ஆம் திகதி கோடியகரைக்கு தென்கிழக்கே தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் விசைப்படகுகளைச் சுற்றி வளைத்து 65 மீனவர்களைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து நாகை மீனவர்கள் நேற்று 7 ஆவது நாளாகவும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. சுமார் ஆயிரத்து 500 விசைப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. குறித்த போராட்டம் காரணமாக மீனவர்களுக்கு பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றுள்ளது. கூட்டத்தில் சிறையிலிருக்கும் 65 மீனவர்களையும் அவர்களது 9 விசைப் படகுகளையும் விடுவிக்கவில்லையாயின் நாளை மறுதினம் நாகை, காரைக்கால் மாவட்டங்களில் மறியல் செய்தும் விசைப்படகுகளில் கறுப்புக் கொடி கட்டியும் பெண்களை கடற்கரையில் நிறுத்தியும் போராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## கண்ணகி ஆலய சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹாசங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும் நடைபெறும்.

இம் மஹாசங்காபிஷேகத்தில் நாளை கண்ணகி அம்மனுக்கு 1009 சங்காபிஷேகமும் தொடர்ந்து கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கும் 1009 சங்காபிஷேகமும் கண்ணகாம்பிகா தேவிக்கு 109 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளன. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: கிளார்க் முன்னேற்றம்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில சதம விளாசிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் தரவரிசையில் ஏற்றம் கண்டுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிந்தது. இதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) டெஸ்ட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

ஆஷஸ் 3-வது டெஸ்டில் 187 ஓடடங்களை குவித்து ஆட்டநாயகன் விருதை பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் துடுப்பாட்ட தரவரிசையில் 3 இடங்கள் முனனேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார்.



தற்போது முதல் இடத்தில் இருகக்கும் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லாவைவிட வெறும் 20 புள்ளிகள் மட்டுமே கிளார்க் பின்தங்கியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான 4-வது டெஸ்டிலும் இதை போல் அசததும் பட்சத்தில், அவர் மீண்டும் முதலிடத்தை பிடித்து விடுவார்.

இதே டெஸ்டில் சதம் அடித்த இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் 2 இடங்கள் உயர்ந்து 14-வது இடத்தை பெற்றுள்ளார்.

இந்திய தரப்பில் முதல் 20 இடத்தில் புஜாரா மட்டுமே உள்ளார். அவர் 6-வது இடத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளார். இவருக்கு அடுத்து இந்தியாவின் சிறந்த நிலையாக அணித் தலைவர் தோனி 21-வது இடத்திலும், விராட் ஹோலி 23-வது இடத்திலும் சச்சின் டெண்டுல்கர் 25-வது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் தென்னாபிரிக்காவின ஸ்ரெயின், வெரோன் பிலாணடர் இலங்கை சுழல் ஹெராத் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களில் தொடருகிறார்கள்.

ஆஷஸ் மூன்றாவது டெஸ்டில் 6 விக்கெட் வீழ்த்திய இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் 6-வது இடம் வகிக்கிறார். இந்திய தரப்பில் முதல் 10 இடத்திற்குள் சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின் (8-வது இடம்), பிரக்யான் ஓஜா (10-வது இடம்) ஆகியோர் இருக்கிறார்கள்.

**முதல் 10 டெஸ்ட் துடுப் பாட்டக்காரர்களின் விபரம்**

1. அம்லா (903 புள்ளிகள்), 2. கிளார்க் (883 புள்ளிகள்), 3. சந்தர்பால் (880 புள்ளிகள்), 4. டி வில்லியர்ஸ் (879 புள்ளிகள்), 5. சங்கக்கரா (866 புள்ளிகள்), 6. புஜாரா (777 புள்ளிகள்), 7. கலிஸ் (756 புள்ளிகள்), 8. குக் (751 புள்ளிகள்), 9. யூனிஸ்கான் (748 புள்ளிகள்), 10. இயன் பெல் (731 புள்ளிகள்).

**முதல் 10 டெஸ்ட் பந்து வீச்சாளர்கள்**

1. ஸ்ரெயின் (905 புள்ளிகள்), 2. பிலாண்டர் (890 புள்ளிகள்), 3. ஹேரத் (831 புள்ளிகள்), 4. சயீத் அஜ்மல் (819 புள்ளிகள்), 5. பீட்டர் சிடில் (816 புள்ளிகள்), 6. ஸ்வான் (770 புள்ளிகள்), 7. அண்டர்சன் (767 புள்ளிகள்), 8. அஸ்வின் (757 புள்ளிகள்), 9. மோர்னே மோர்கல் (715 புள்ளிகள்), 10. பிரக்யான் ஓஜா (706 புள்ளிகள்).

# பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணம் இறுதிப் போட்டிக்கு யாழ்.சென்றல்

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் இருபது-20 துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்.சென்றல் அணி யாழ்.ஜொனியன்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களை பெற்றது.

அகிலன் 55, விதுஸன் 19, காணாமிர்தன் 16, அன்புஜன் 32, ஓட்டங்களை பெற்றனர்.

றொகான், யசின்தன், றஜீவ் குமார் தலா 2 இலக்குகளையும், சுபாதீஸ் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 18.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை பெற்றது. றஜீவ் குமார் 58, சலிஸ்ரன் 22, றொகான் 37 ஓட்டங்களை பெற்றனர். அகிலன் 3 இலக்குகளையும், லவேந்திரா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

# பற்றீசியன்ஸ் அணியை வீழ்த்தியது கொக்குவில் கே.சீ.சீ.சீ

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் 1 ஆவது ஆண்டாக நடத்தும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை 10.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சீ.சீ.சீ. அணி பற்றீசியன்ஸ் அணியை 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களை பெற்றது.

யனுதாஸ் 96, ஜெயரூபன் 35 ஓட்டங்களை பெற்றனர். லிவிங்ரன் 03, கிலிஸ்ரன் 02, சுஜீவன், நிதர்ஸன், தலா 01 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை பெற்றது. கிலிங்ரன் ஆட்டமிழக்காது 59, ஜெயந்திரன் 23, நிதர்சன் 16 ஓட்டங்களை பெற்றனர்.

சிலோஜன், பிரதீப், பவி தலா 2 இலக்கினையும் பார்த்தீபன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

# இருபது - 20 தரப்படுத்தல் இலங்கை முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபது-20 தரப்படுத்தலில் இலங்கை அணி தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவிற்கெதிரான 3ஆவதும், இறுதியுமான இருபது-20 சர்வதேசப் போட்டியில் வெற்றி பெற்றே இலங்கை அணி தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்திருக்குமாயின் இலங்கை அணி 3ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டிருக்கும் என்பதோடு, இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரில் 0-3 என்ற கணக்கில் தோல்வியடைந்த முதலாவது டெஸ்ட் அந்தஸ்துள்ள நாடு என்ற மோசமான சாதனைக்கும் சொந்தமாகியிருக்கும்.

எனினும் போட்டியில் இலங்கை அணி திலகரட்ண டில்சான், திஸார பெரேரா, மஹேல ஜெயவர்தன ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் வெற்றிபெற்றதால் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

அப்போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றதன் காரணமாக பாகிஸ்தான் அணி முதலிடத்திற்கு வரும் வாய்ப்புக் கிடைக்காமல் போனதோடு, அவ்வணி தொடர்ந்தும் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறது.

# அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள்: டைகர் வூட்ஸ் முதலிடம்



அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களில் அமெரிக்க கோலப் வீரர் டைகர் வூட்ஸ் முதலிடம் வகிக்கிறார்.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான 'போர்ப்ஸ்' இதழ், இந்த ஆண்டு அதிக பணம் சம்பாதித்த வீரர், வீராங்கனைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

100 பேர் கொண்ட இந்த பட்டியலில் அமெரிக்க கோல்ப் வீரர் டைகர் வூட்ஸ் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அவர் 2012-ம் ஆண்டு ஜூன் முதல் 2013-ம் ஆண்டு ஜூன் வரையிலான காலக்கட்டத்தில் மொத்தம் ரூ.475 கோடி சம்பாதித்து இருக்கிறார். 2-வது இடத்தில் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற டென்னிஸ் வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளார். அவரது வருமானம் ரூ.435 கோடியாகும்.

கிரிக்கெட் வீரர்களில் 2 பேர் மட்டுமே இந்தப் பட்டியலில் வருகிறார்கள். ஒருவர் இந்திய அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி 16-வது இடத்தில் உள்ள அவர ரூ.192 கோடி ஆண்டு வருவாயாக ஈட்டியிருக்கிறார்.

இதில் ரூ.170 கோடி விளம்பரம மூலம் வந்த் வருமானம் ஆகும். எஞ்சிய ரூ.22 கோடி பரிசுத் தொகை மற்றும் போட்டிக்குரிய ஊதியம் ஆகும்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் ரூ.134 கோடியுடன் 51-வது இடம் வகிக்கிறார்.

வீராங்கனைகளில் நிறைய வருவாய் திரட்டும் பட்டியலில் ரஷய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தொடர்ந்து 9-வது ஆண்டாகவும் முதலிடத்தில் இருக்கிறார்.

அவரது வருவாய் தொகை ரூ.176 கோடி. இதில் விளம்பரம் மற்றும் இதர வர்த்தகத்தின் மூலம் சேகரித்த ரூ.140 கோடியும் அடங்கும்.

அவருக்கு அடுத்தபடியாக அமெரிக்க டென்னிஸ் ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ் உள்ளார். அவரது வருடாந்திர வருமானம் ரூ.125 கோடியாக உள்ளது.

# உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் சாய்னா 2 ஆம் சுற்றில் வெற்றி

சீனாவின் குவாங்சோவ் நகரில் உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் பங்கேற்றுள்ள இந்திய முன்னணி வீராங்கனைகள் சாய்னா நேவால், பி.வி.சிந்து இருவரும்பை ஆடர் வாய்ப்பு பெற்றதால் நேரடியாக 2-வது சுற்றில் விளையாடினர்.

லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற சாய்னா, நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் 2-ம் சுற்று ஆட்டத்தில், ரஷ்யாவின் ஒல்காவை 21-5, 21-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

இன்று நடைபெற உள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தாய்லாந்தின் போர்ன் டிப்பை எதிர்கொள்கிறார் சாய்னா.

போர்ன்டிப்புடன் இதுவரை 5 முறை விளையாடிய சாய்னா, அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால், இது போன்ற போட்டிகள் திடீரென திருப்பு முனையாக [illegible] சாதனைகளை சாய்னா கணக்கில் கொள்ளாமல், எச்சரிக்கையுடன் ஆடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் 10-ம் தரநிலை வீராங்கனையான பி.வி.சிந்து, தரநிலையில் மிகவும் பின்தங்கியிருக்கும் ஜப்பான் வீராங்கனை கவோரி இமாபெப்புவை 21-19, 19-21, 21-17 என்ற செட்கணக்கில் வென்றார்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாநில அரசு உருவாகிவிடும்!

(கொழும்பு)
தாயநாட்டை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரித்து வேறுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென பிரதமர் டி. எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்த வெளிநாட்டுச் சக்திகள் உள்ளிட்ட பல பிரிவினர் முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பளை தேர்தல் அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## 2013-ம் ஆண்டின்...

யாழ்.மாநகர சபை ஆணையாளருமான செ.பிரணவநாதன் தலைமையில் கூடியது.

இதன்போது 2013-ம் ஆண்டுக்கான யாழ் விருது அருட்திரு மரியசேவியர் அடிகளாருக்கு வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அருட்திரு மரியசேவியர் அடிகளார் கலைப் பணிக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவையைக் கௌரவிக்கும் வகையிலும், சைவ சித்தாந்தத்தில் அவர் மேற்கொண்ட ஆய்வுக்காகவும் இவ்விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

நடராஜமூர்த்தத்தின் தோற்றுவாயாக இருக்கும் நடனக் கலையை ஒழுங்குநெறி தவறாமல், பயிற்றுவிக்கின்ற-அரங்கேற்றுகின்ற அடிகளாரின் தூய பணிக்கு புகழாரம் சூட்டப்பட்டது.

சைவ சித்தாந்தத்தில் ஆய்வு மேற்கொண்ட அருட்திரு.மரிய சேவியர் அடிகளார் உமாபதி சிவாச் சாரியாரின் கொடிக்கவியை இறுவட்டில் வெளியிட்டிருந்தார்.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநராக இருந்து முத்தமிழ் வளர்க்கும் அவரின் பெரும் பணிக்காக யாழ் விருது வழங்குகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின்போது இவ்விருது வழங்கப்படும். (ந)

## பிரதமர் அச்சம்

வடக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என அனேகர் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியிலே அந்தக் கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்தத் தயார் என்றாலும் நாட்டில் நிலையான சமாதானம் சுதந்திரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அழுத்தங்களை ஒதுக்கித் தள்ளவும் தயார் என பிரதமர் குறிப்பிட்டார்.

வடக்கிற்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கினால் அது மாநில அரசாக மாறிவிடும் என கூறும் பிரதமர், அதன் மூலம் காணி பங்கீடு மற்றும் பாதுகாப்பு என்பன அவர்கள் வசமாகும் எனக் கூறுகிறார்.

நாட்டைப் பாதுகாப்பதா அல்லது பிரித்துக் கொடுப்பதா என்பதைத் தீர்மானிக்க எதிர்வரும் தேர்தல் மிக முக்கியமானதாகும் என பிரதமர் டி. எம். ஜயரட்ண தெரிவித்தார். (செ-11)

## பதாகைகள்...

முறை தோதலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விளம்பரப்படுத்தும் முகமாக விளம்பரங்களினை வீதிகளில் காட்சிப்படுத்தக்கூடாது. அவ்வாறு காட்சிப்படுத்தினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுவரொட்டிகள் ஒட்டுவோரும் அச் சுவரொட்டிகளுக்குரிய வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டு அவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலும் நல்லூர் கந்தன் ஆலய திருவிழாக்களின் போதும் இவ் வாறான தேர்தல் பிரசார நடவடிக்கைகளினை பக்தர்களுக்கு இடையூறு தரும் விதத்தில் மேற் கொண்டால் அதற்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான நடவடிக்கைகளினை தவிர்த்து வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (செ-4)

## இராணுவத்தை...

கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிவேரிய ரத்துபஸ்வலவில் இடம் பெற்ற மிலேச்சத்தனமான சம்பவத்திற்கு அரசாங்கம் வழமை போன்று யாரையாவது குற்றம் சாட்டிவிட்டு தப்பிக்க முயல்கின்றது.

ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு பொலிஸாரை அனுப்பாது இராணுவத்தை அங்கு அனுப்பியது யார்? அவர்களை துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு உத்தரவிட்டது யார் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆர்ப்பாட்டத்தின் போது கொல்லப்பட்ட ரொஷான் சாணக்கவின் மரணத்திற்கு இரண்டு வருடங்களும் 2 மாதமாகியும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என்று அவரது சகோதரன் அண்மையில் ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்திருந்தார். இந்த நிலைமைதான் வெலிவேரியவில் பலியான மூவருக்கும் ஏற்படும்.

இதற்கு சுயாதீனமான சர்வதேச ஆணைக் குழுவொன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை மறைப்பதற்காக அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஆனால் இதனை மறைக்க முடியாது. இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மு.கா. பல்டி...

அரசாங்கத்துடன் இணைந்து தேர்தலில் போட்டியிட மாட்டோமென முஸ்லிம் காங்கிரஸ் வழமை போன்று பல்டி அடிக்க ஆரம்பித்துள்ளது.

இம்முறை கண்டியில் தேர்தல் இடம் பெறுவதன் காரணத்தாலேயே ஜனாதிபதியை வரவழைத்து இப்தார் நிகழ்சி ஏற்பாடு செய்யப்பட்டது. ஹக்கீமின் செயற் பாடுகள் அனைத்தையும் முஸ்லிம் மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

முஸ்லிம்களின் பலத்தை கடந்த தேர்தல்களில் காட்டியிருந்தால் பள்ளிகள் மீது தாக்குதல்கள் தற்போது இடம்பெற்றிருக்காது.

இம் முறை தேர்தலில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அரசுக்கு நல்ல பாடம் புகட்டுவர். அந்தவகை யில் வடக்கு மற்றும் கண்டியில் இடம்பெறும் தேர்தல்களில் வெற்றி பெற்று ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவோம் என அவர மேலும் தெரிவித்தார். (செ-11)

## அரசாங்கத்துக்கு...

இது வேண்டும் என்றே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவரும் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ முடியாது. அவ்வாறு எவரும் செயற்பட்டால் அவர்களுக்கு வெலிவேரியவில் இடம் பெற்றதே கிடைக்கும் என்பதை வெளிப்படையாக புரியவைக்கவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நாட்டில் அன்று அப்பாவி தமிழ் மக்கள் மீது தாக்குதல் இடம்பெற்றது. அதனையடுத்து முஸ்லிம் மக்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது இது சிங்கள மக்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளது.

வெலிவேரியவில் மூவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு சர்வதேச விசாரணை அவசியம் என எதிர்க் கட்சிகள் வலியுறுத்துகின்ற நிலையில் வன்னியில் குறைந்தது 70 ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் கொல் லப்பட்டமைக்கும் சர்வதேச விசாரணை அவசியம்என்பதனையே ஐ.நா. வலியுறுத்தியது.

எமது நாட்டிற்கு சர்வதேச ரீதியில் அவப்பெயர் தற்போது ஏற்பட்டுள்ளது. இதற்கு சுயாதீனமான சர்வதேச விசாரணை இடம் பெற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## ஜப்பானிய...

விருந்தினராக அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன.

இளவரசி சுக்குகோ இந்த வருடம் ஜப்பான் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரையும் சந்தித்திருந்தார். (செ-11)

## எயிட்ஸ்...

தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்நிலையில், முதலாவது காலாண்டில் 9 பேரும் இரண்டாவது காலாண்டில் 7 பேரும் எயிட்ஸ் நோயால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தொற்றுக்கு இலக்கான வர்களில் 260 பேர் 2011ஆம் ஆண்டு உயிரிழந்துள்ளனர் என் றும் அப்பிரிவு அறிவித்துள்ளது.

மேலும், 2013ஆம் ஆண்டு இதுவரையில் ஆயிரத்து 693 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில். 2013ஆம் ஆண்டு முதல் இரண்டு காலாண்டுகளில் ஆயிரத்து 41 ஆண்களும் 698 பெண்களுமென ஆயிரத்து 739 பேர் எச்.ஐ.வீ தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

2013ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் 457 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 310 ஆண்களும 147 பெண்களும் அடங்குகின்றனர். (செ-11)

## இலங்கைத்...

சந்திப்பின் போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் குறித்து இந்திய அதிகாரிகள் கவலை வெளியிட்டனர்.

தமிழக மீனவர்கள் இலங்கை யின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதால், தமது வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால், இந்திய மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் அழுத்தங்கள் அரசின் மீது அதிகரிததாலேயே அவர்களை சிறைபிடிக்க வேண்டிய தேவை 'ஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

## அமைச்சர் பீரிஸ்...

தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழை வழங்க உள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 15-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பின்னர், தீர்மானம் எடுக்க உள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. சில விடயங்களின் அடிப்படையில் அவரது தீர்மானம் அமையும் எனவும் கூறப்படுகிறது.

அதேநேரம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இந்தியாவும் சர்வதேச சமூகமும் உன்னிப்பான அவதானிப்புகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த தேர்தலும் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பிலான விடயங்களைத் தீர்மானிக்கும் என நம்படுகிறது.

இதனிடையே தேர்தலுக்கு பின்னர், 13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தில் மாற்றங்களை செய்ய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த சட்டங்களில் மாற்றங்கள் செய்வது தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் ஆராய்ந்து வருவதுடன் அறிக்கையை தேர்தலுக்கு பின்னர் சமர்ப்பிக்கும் என தெரிய வருகிறது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை செய்வதை இந்தியா விரும்பவில்லை. இதனை ஏற்கெனவே இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

அதேவேளை புதுடெல்லி அரசாங்கம், இலங்கையின் இந்த விடயம் தொடர்பில் தமிழகத்தின் அரசியல் அழுத்தங்களை எதிர் நோக்கி வருகிறது.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் பங்கேற்க கூடாது என தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சிகள் அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.

இதனிடையே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த மாத இறுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

எனவே பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டிற்கு இந்தியப் பிரதமரது வருகைக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வரும்நிலையில் வெளிவிவகார அமைச்சர்ஜிஎல் பீரிஸ் டில்லி பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


### SLEAS கருத்தரங்கு

*வெள்ளி (09.08), திங்கள் (12.08), செவ்வாய் (13.08), புதன் (14.08)*
*தினங்களில் காலை 9 மணி தொடக்கம் 3.30 மணிவரை*
**யாழ்ப்பாண கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு**
*(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)*
(3563)

### தேவை

A/L சித்தியடைந்த Female Clerk
தேவை. யாழ்ப்பாண நகரை அண்டியவர்கள் மாத்திரம்.
078 5285342
(C-4250)

### வேலையாட்கள் தேவை

RK CERAMIC 122, பிரதான வீதி, நெல்லியடி மற்றும் கச்சாய் றோட் சாவகச்சேரி ஆகியவற்றுக்கு வேலையாட்கள் தேவை. சனிக்கிழமை 10-08-2013 காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நேரில் வரவும். கல்வித்தகைமை : G.C.E O/L, ஆண் / வெண் இருபாலாரும் (வயது 18-25)
**R K CERAMIC**
122, Main Street, Nelliady.
0776660699, 021 3207525
(3568)

### New Science Hall

*Kannathiddy Road, Jaffna.*
**தொழில்நுட்பவியல் கற்கைநெறி**
(Technology Subject Stream)
- ✔ பொறியியல் தொழில்நுட்பவியல் – Engineering Technology
- ✔ உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் – (Biosystems Technology)
- ✔ தொழில் நுட்பவியல் விஞ்ஞானம் – (Science For Technolgy)

2015 A/L
**எமது நிறுவன விரிவுரையாளர் குழாம் ஆரம்பமாகிவிட்டது**
(நேர அட்டவணையை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு: 077 1240400
(சி-4253)

### மலிவு விற்பனை

| அலுவலக பொருட்கள் | கடை விலை | எமது விலை |
|---|---|---|
| Excecutive மேசை | 17,390/= | 12,290/= |
| Excecutive கதிரை | 7,500/= | 5,250/= |
| சுழல் கதிரை | 3,850/= | 2,310/= |
| கட்டில், மெத்தை | 15,550/= | 10,000/= |
| **விரிவுரை மண்டப பொருட்கள்** | **கடை விலை** | **எமது விலை** |
| Box செற் | 16,500/= | 13,200/= |
| விரிவுரையாளர் கதிரை | 6,000/= | 4,200/= |
| விரிவுரையாளர் மரக்கதிரை | 4,000/= | 2,800/= |
| CD பிளேயர் | 3,200/= | 2,540/= |

தொடர்புகளுக்கு : 021 790 4941
(C-4250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.